**தலைப்பு - 111 சுகாதார அமைச்சு**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

**கணக்காய்வின் நோக்கெல்லை**

சுகாதார அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணைக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்டோபர் 13 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும், கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம்மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும், பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணைக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆகிய உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும், நிர்வாகப் பிரமாணங்கள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணைக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுல்படுத்துதல், பேணுதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**1.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சுகாதார அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணைக்கக் கூற்று என்பன இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஔ) வரையான பொது அவதானிப்புகள் மற்றும் 1.4 இலிருந்து 1.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு கண்டுபிடிப்புகளைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

அமைச்சினால் 2014 மார்ச் 31 ஆந் திகதியளவில் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| **விடய இலக்கம்** | **கணக்கின் பெயர்** |
|---|---|
| 34003 | கலைப்பு முற்பண கணக்கு, அங்கொடை மனநோய் வைத்தியசாலையின் தொழில்சார் சிகிச்சை முற்பணக் கணக்கின் செயற்பாட்டு கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடுவதற்கான முற்பணக் கணக்கு. |
| 34004 | அங்கொடை மற்றும் முல்லேரியா மனநோய் வைத்தியசாலைகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களின் உபயோகத்துக்கான வெதுப்பக முற்பணக் கணக்கின் செயற்பாட்டு கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடுவதற்கான முற்பணக் கணக்கு. |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை கணக்காய்வு தெரிவுச் செவ்வையின்போது அவதானிக்கப்பட்டது.

| **பதிவேட்டின் வகை** | **உரிய பிரமாணம்** |
|---|---|
| இழப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| வாகனப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) |

**(இ) கணக்காய்வுக்கான சான்றின்மை.**

(i) தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்கு அருகில் காணப்படும் வைத்தியசாலைக்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை, நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் 2013/03 ஆம் இலக்க அனுமதிப் பத்திரத்தின் மூலம் ஏற்பாடு செய்து ரூபா 11,561,642 பெறுமதி வாய்ந்த வைத்திய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இக் கொள்வனவுக்குரிய கொடுப்பனவு உறுதிச்

சான்றை உயிரியல் வைத்தியப் பொறியியலாளர் பிரிவு கணக்காய்விக்குச் சமர்ப்பிப்பதற்குத் தவறியிருந்தது.

(ii) குறித்த வைத்தியசாலை உபகரணங்களைக் கோரிக்கை விடுத்ததையோ, உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போது ஒப்பனைச் சாதனங்கள் மற்றும் ஔடதக் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டதையோ, குறித்த வைத்தியசாலை அவ்வுபகரணங்களைப் பொறுப்பேற்றதாகவோ, அல்லது பொருத்தப்பட்டதையோ குறிக்கும் தேவையான சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்படாமையினால், உயிரியல் வைத்தியப் பொறியியலாளர் பிரிவு குறித்த 06 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்த ரூபா 175,259,931 கூட்டுத் தொகையுடைய வைத்திய உபகரணங்களின் கொள்வனவு தொடர்பாகக் கணக்காய்வின்போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதுள்ளது.

**(ஈ) <u>கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளித்தல்</u>**

மீளாய்வாண்டில் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 09 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2014 மார்ச் 31 ஆம் திகதியளவில் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐய வினாக்களுக்கான கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 323,742,928 ஆகும். கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலைக்கு 2010 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட 03 ஐய வினாக்களுக்கும் 2013 ஆம் ஆண்டில் கம்பளை ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட 03 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் கண்டி போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட 04 ஐய வினாக்களுக்கும் 2013 திசெம்பர் 31 ஆந்திகதியளவிலும் பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(உ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

மீளாய்வாண்டில் அமைச்சுக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 94,972,264,000 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 92,994,584,162 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 1,977,679,838 அல்லது தேறிய நிதி ஏற்பாட்டில் 2 சதவீதம் சேமிப்புக்குள்ளாகியது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

**2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டெழுபவை | 76,450,000,000 | 75,559,318,083 | 890,681,917 | 1.17 |
| மூலதனம் | 18,522,264,000 | 17,435,266,079 | 1,086,997,921 | 5.87 |
| மொத்தம் | 94,972,264,000 | 92,994,584,162 | 1,977,679,838 | 2.08 |

**(ii) பாதீட்டு முரண்**

முப்பத்து நான்கு செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 120,255,458 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஊ) வருமானக் கணக்கு**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சினால் 2013 ஆம் ஆண்டில் 10.03.07.01 ஆம் வருமானக் குறியீட்டிற்காக ரூபா 165 மில்லியன் கூட்டுத் தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின்போது ரூபா 171.8 மில்லியன் வருமானமாக சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 104.12 சதவீதம் ஆகவிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

**2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக மிகை |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 10.03.07.01 | 165,000,000 | 171,812,780 | 6,812,780 | 4.12 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம், 2013 ஆம் ஆண்டின் தேறிய வருமானம் ரூபா 171,812,780 ஆக இருந்ததுடன், வைத்திய தொழில் நுட்ப மற்றும் வழங்கல்கள் பணிப்பாளரின் அறிக்கையின்படி, 2013 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 170,776,000 ஆகும். அதற்கிணங்க, ரூபா 1,036,780 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**(எ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுடன் தொடர்புடைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆதி குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 11101 | 9,300,000,000 | 667,824,867 | 662,000,000 | 748,796,088 | 2,067,000,000 | 1,279,223,053 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகினறன.

11101 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம், அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டு மொத்தம் கீழே காணப்படும் ரூபா 166,965,564 ஆக இருந்ததுடன், அதனுள் அசைவற்ற (5 வருடத்துக்கு மேற்பட்ட) ரூபா 66,047,901 கூட்டு மொத்த கடன் நிலுவை இருந்தது. இது மொத்தக் கடன் மீதியின் 40 சதவீதமாகும். அந்நிலுவை மீதிகளை அறவிடுதல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

**(ஏ) கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து மூடப்படும் கணக்குகள்**

2004 செப்டெம்பர் 22 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் இலக்கம் அ.ம.ப 04/1121/008/036 இன் பிரகாரம், 34003 ஆம் விடய இலக்க அங்கொடை மனநல வைத்தியசாலை தொழில்சார் சிகிச்சை முற்பண கணக்கு மற்றும் 34004 ஆம் விடய இலக்க அங்கொடை மற்றும் முல்லேரியா மனநல வைத்தி சாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களின் உபயோகத்துக்கான வெதுப்பக முற்பணக் கணக்கு ஆகிய இரு கணக்குகளும் 2004 நவம்பர் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கலைக்கப்பட வேண்டியபோதும், 2014 செப்டெம்பர் 29 ஆம் திகதியளவில் ஏறத்தாழ 10 ஆண்டுகள் கடந்தும் அக் கணக்குகள் கலைக்கப்படவில்லை.

**(ஐ) கட்டு நிதிக் கணக்குகள்**

அமைச்சின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கட்டு நிதிக் கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 124,051,050 ஆகக் காணப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| கட்டு நிதிக் கணக்கு இலக்கம். | 2013 டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா |
| 7002/0000/00/0100/0013/000 | 108,102,839 |
| 7003/0000/00/0014/0013/000 | 1,676,280 |
| 7003/0000/00/0043/0004/000 | (15,000) |
| 7003/0000/00/0043/0005/000 | 14,286,931 |
| **மொத்தம்** | **124,051,050** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

2014 ஏப்ரல் 30 ஆம் திகதியளவில் அமைச்சினால் பொதுத் திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யப்படாது காணப்பட்ட கட்டு நிதிக் கணக்கு மீதிகளின மொத்தம் ரூபா 24,091,206 ஆகக் காணப்பட்டது.

**(ஒ) பொது வைப்புக் கணக்கு**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 374,398,212 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| **பொது வைப்புக் கணக்கு இலக்கம்** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா** |
| 6000/0000/00/0001/0026 | 11,352,687 |
| 6000/0000/00/0002/0027 | 24,745,079 |
| 6000/0000/00/0015/0024 | 338,300,446 |
| | 374,398,212 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 66,621,832 கூட்டுத் தொகையான வைப்புகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎஸ்/ஆர்/2/2/3/5/4 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின்படி, அமைச்சினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதொன்றாயினும், மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2013 பெப்ரவரி 27 ஆம் திகதி தயாரிக்கப்பட்டுக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.4.2 வருடாந்தத் கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் 2013 மார்ச் மாதம் 01 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2013 மார்ச் 06 ஆம் திகதி அமைச்சினால் 2013-2015 ஆம் ஆண்டுகளுக்கான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.4.3 உள்ளகக் கணக்காய்வு

அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வதானிப்புகள் தொடர்பாகத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று இருந்தமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்றிருந்த காலம் |
| --- | --- | --- |
| கட்டிடங்கள் | 01 | 3 வருடங்களாக |
| வாகனங்கள் (மோட்டார் சைக்கிள்கள்) | 03 | 1 வருடத்துக்கு மேல் |
| இயந்திர சாதனம் | 02 | 1 வருடத்துக்கு மேல் |
| மருத்துவ உபகரணங்கள் | 02 | 1 வருடத்துக்கு மேல் |
| Mould Room தயாரிப்பு உபகரணம் | 01 | 2 வருடங்களுக்கு மேல் |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎவ்/மதிப்பாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2013 ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கையினை 2014 மார்ச் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், 2014 மே 31 ஆம் திகதியளவிலும் அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சு, வைத்தியசாலைகள் மற்றும் 67 நிறுவகங்களின் வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டி இருந்த போதிலும், அமைச்சு, வைத்தியசாலைகள், மற்றும் 27 நிறுவகங்களின் மெய்மையாய்வு மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ் அறிக்கைகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கடைசியாக 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவை தொடர்பான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தேசிய லைத்தியசாலையில் பொருள் மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டிருந்த போதும், மெய்மையாய்வு நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் குறித்த அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதாக 2012 நவம்பர் 04ம் திகதி அறிவித்திருந்த போதிலும், 2014 ஏப்ரல் 23 ஆம் திகதி வரை 2009 ஆம் ஆண்டு தொடக்கம் எதுவிதமான வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு

அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஒக்டோபர் 25 ஆம் திகதிய PFP/03/03 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 04ம் பந்திக்கு அமைய, தவறவிடப்பட்ட வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளுடன் 2013 ஆம் வருடத்திற்கான பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளை 2014 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு செய்து முடிப்பது உசிதம் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், தேசிய வைத்தியசாலை அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**(இ) வேறு நிறுவனங்களிடமிருந்து கிடைத்துள்ள சொத்துக்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நன்கொடை அல்லது வேறு வகைகளில் கிடைக்கப்பெற்ற 253 பொருட்கள் தொடர்பில் எழுத்து மூலமான ஒப்படைத்தல் அல்லது பொருளிருப்பில் உட்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பொருட்களைத் தயாரித்துப் பொருத்துதல் சம்பந்தமாகவும் பொருளிருப்பில் உட்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரிடம் பொருட்கள் தொடர்பிலான பொறுப்பை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வெளித்தரப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

---

அமைச்சினால் வெளித்தரப்பினர்களிற்கு முறையற்றவாறு சில சொத்துக்கள் விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கலஹா பிக்குமார்களுக்கான தேசிய சுகாதார மத்திய நிலையத்தின் உத்தியோகப் பணிகளுக்காக, கண்டி போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. அதில் ஒரு ஜீப் வண்டியை கண்டி தாதிமார் பயிற்சிப் பாடசாலையுடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சின் பணிப்பாளரினால் (போக்குவரத்து) 2013 ஏப்பிரல் 11 ஆம் திகதி வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 மார்ச் 03 ஆம் திகதி வரையிலும் அவ்வாகனம் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1982 ஒக்தோபர் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசாங்க காணி ஒன்றில் குடியிருப்பதற்கான வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்றின் ஊடாக இலங்கை

குடும்ப சுகாதார, குடும்ப திட்டமிடல் தொண்டர் சங்கத்துக்கு 28.6 பேர்ச் காணி வழங்கப்பட்டிருந்தது. அச் சங்கம் தற்போது செயற்படாத ஒரு சங்கமாக காணப்படுவதுடன், இவ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடத்தில் இரண்டு தனியார் வியாபார நிலையங்கள் எவ்விதமான கட்டணங்களும் செலுத்தாமல் அனுமதியின்றி நடாத்திச் செல்லப்படுவதாக தெரியவந்துள்ளது. அக்காணியை கண்டி பொது வைத்தியசாலை பெறவேண்டுமாயின், சுகாதார அமைச்சின் சம்மதத்துடன் பரிந்துரை சமர்ப்பிக்குமாறு காணி உதவி ஆணையாளரினால் 2013 ஒக்டோபர் 08 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தபோதும், அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(உ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

அமைச்சினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்தை விடக் குறைந்த காலத்தையுடைய தீர்க்கப்படாது காணப்படும் பொறுப்புகளின் கூட்டுத் தொகை ரூபா 13,446,202,217 ஆக காணப்பட்டது. அப் பொறுப்புகளில் ரூபா 8,634,854,839 மருத்துவ வழங்கல்களுக்காக செலுத்தப்பட வேண்டிய தொகையாகும்.

## 1.6 இணக்கமின்மை

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | பெறுமதி ரூபா | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (அ) | நியதிச்சட்ட ஏற்பாடுகள் | - | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 60 ஆம் உறுப்புரை. | - | குற்றப்பத்திரத்தின் படி குற்றவாளி என அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் முடிவுசெய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரை சேவையிலிருந்து நீக்குமாறு பிறப்பிக்கப்பட்ட ஒழுக்காற்றுக் கட்டளை சுகாதார அமைச்சுக்குக் கிடைத்திருந்தது. அமைச்சு கவனயீனமாகச் செயற்பட்டு அந்தக் கட்டளையை உரிய வைத்தியருக்குக் கையளிக்காது |

| | | |
|---|---|---|
| | | தவிர்த்துள்ளது. |
| (ii) | 2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும அதிகாரச் சட்டத்தின் - 13(1) ஆம் பிரிவு. | தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையினால் தனியார் மருத்துவ நிறுவனங்களின் தொழில் நுட்பத் தேர்ச்சி மற்றும் சேவைகளின் திறன் தன்மை மற்றும் வசதிகளை சான்றுறுதிப்படுத்தும் கடமைகளுக்காக பின்பற்றப் படும் நடைமுறைகள் தொடர்பிலான ஒழுங்கு விதிகளை, ஒழுங்குபடுத்தல் சபையினால் அமைச்சரின் ஊடாக வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டும். எனினும், அதிகாரச் சட்டம் அமுலாக்கப்பட்டு 8 வருடங்கள் கடந்தும் தனியார் மருத்துவ நிறுவனங்களை நிர்வாகம் செய்தல் தொடர்பில் அவ்வாறான ஒழுங்குமுறைகள் தயாரிக்கப்பட்டு வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 4(1)(i)மற்றும் (ii) ஆம் உப பிரிவுகள் -- | (i) சகல தனியார் மருத்துவ மனைகளும் இவ் ஒழுங்கமைப்பு சபையில் பதிவு செய்யப்பட வேண்டியிருப்பினும், 2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை அதிகளவான மருத்துவ நிறுவனங்கள் பதிவுச்சான்றிதழின்றி அவர்களது தொழில் நடவடிக்கைகளை நடாத்தியிருந்தனர்.<br><br>(ii) பதிவு செய்வதன் மூலம் பெறப்படும் வருமானத்தின் 50% குறித்த மாகாண சபைக்கு செலுத்தப்பட வேண்டுமாயினும், 2008 |

ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை மாகாண சபைகளுக்கு செலுத்தப் படவேண்டிய ரூபா 26,552,000 செலுத்தபபட்டிருக்கவில்லை.

(iii) 2006 ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரை வருடாந்தம் கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்கென கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

(ஆ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை**

---

II ஆம் தொகுதி XLVIIஆம் அத்தியாயத்தின் 6 ஆம் பிரிவு.

சுகாதார அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமின்றி சுகாதார அமைச்சின் ஊடக அலுவலர் ஊடகங்களுக்குத் தகவல் தெரிவித்ததன் காரணமாக பாதிப்புக்குள்ளான ஒரு கட்சியினர் ஊடக அலுவலருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்ததனால், வழக்குக் கட்டணமாக ரூபா 227,700 அரசாங்க நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(இ) <u>பொது நிர்வாக சுற்றறிக்கைகள்</u>
1990 ஒக்டேபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்கச் சுற்றறிக்கை.

சுகாதார அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுத் கணக்காய்வின்படி, கண்டி போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான 33 வாகனங்களது எரிபொருள் நுகர்வு 06 மாதத்திற்கொருமுறை பரிசீலிக்கப் பட்டிருக்கவில்லை.

(ஈ) <u>முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை</u>
2011 ஏப்ரல் 7 ஆம் திகதிய

மருத்துவத் துறை அல்லாத சேவைத் துறைகளுக்குரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 19

| | | |
|---|---|---|
| 45 ஆம் இலக்க சுற்றறிக்கையின் -5(இ) பந்தி | | ஆராய்ச்சிகளுக்கான முன்மொழிவுகள் தொழில் நுட்ப ஆராய்ச்சி அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள ஆராய்ச்சிக் கண்காணிப்புக் குழு மூலம் அல்லது குறித்த ஆராய்ச்சிக் கண்காணிப்புக் குழுவினால் நியமிக்கப்பட்ட துணைக்குழுவிடம் சமர்ப்பித்து அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. |
| - 6 (iii) நிபந்தனைகள் | 10,925,959 | சுற்றறிக்கையின் 6(iii) ஆம் நிபந்தனையின்படி, எதிர்பார்த்த ஆய்வு நடவடிக்கைகள் காரணமாக அவர்களது நிரந்தர கடமைகளுக்குத் தடை ஏற்படக் கூடாது எனக் கூடாதெனினும், பணியிலிருந்து முற்றாக விடுவிக்கப்பட்ட வைத்தியர்கள் அவர்களது பட்டப் பின்படிப்பு கற்கையின் நிமித்தம் மேற்கொண்ட ஆய்வுகளுக்குக் கட்டணம் செலுத்தவேண்டியதில்லை யாயினும், அவ்வாறாக மேற்கொள்ளப்பட்ட 157 ஆராய்ச்சிகளுக்கு ரூபா 10,925,959 செலுத்தப்பட்டிருந்தது. |

(உ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை

---

| | | |
|---|---|---|
| 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய PF437 ஆம் இலக்க சுற்றறிக்கை | | கண்டி போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான 04 வாகனங்களைத் தவிர ஏனைய சகல வாகனங்களும் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. |

(ஊ) சுகாதார அமைச்சின் சுற்றறிக்கைகள்

---

| | | | |
|---|---|---|---|
| (i) | 2012 மார்ச் 30 ஆந் திகதிய 01-06/2012(1)ஆம் இலக்க பொதுச் சுற்றறிக்கையின் 6.0 ஆம் பந்தி | - | ஆராய்ச்சிகளுக்கான படி வழங்கப் படும்போது 06 மாதத்தின் பின்னர் செலுத்துவதற்காகச் சமர்ப்பிக்கப்படும் இடைக்கால முன்னேற்ற அறிக்கையினை ஆராய்ச்சி முகாமைத்துவ துணைக்குழு சிபாரிசு செய்ததன் பின்னர் ஆராய்ச்சிகளுக்கான படி செலுத்தப்பட அங்கீகரிக்கப்பட வேண்டும். துணைக் குழுவினால் முன்னேற்ற அறிக்கை பரிசீலிக்கப்பட்டு சிபாரிசு செய்யப்பட்டதற்கான சாட்சியங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப் படவில்லை.<br>ஆய்வுகளை ஆரம்பித்து 06 மாதத்தின் பின்னர் ஆய்வின் முன்னேற்றம் பற்றிய முன்னேற்ற அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு வேண்டுகோள் விடுப்பதன் மூலம் ஆராய்ச்சிகளுக்காக செலுத்தப்படும் உதவித்தொகை சிக்கனமற்ற முறையில் செலுத்தப்படுவது கட்டுப்படுத்தப்பட்டிருந்து இடைநடுவில் நிறுத்தப்படும் ஆய்வுகள் தொடர்பில் அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப் படவேண்டிய நடவடிக்கைகள் எவையென நிர்ணயம் செய்யப் படவில்லை. |
| (ii) | 2013 சனவரி. 01 ஆந் திகதிய | 35,717,477 | உத்தியோகத்தர்களுக்கு மேலதிக வேலைக் கொடுப்பனவு, விடுமுறை |

| | | |
|---|---|---|
| எஸ் எவ்/ஏ/01/201 ஆம் இலக்க நிதி நிர்வாகம் சம்பந்தமான அதிகாரக் கையளிப்பு சுற்றறிக்கையின் II ஆம் பந்தி | | தினக் கொடுப்பனவு மற்றும் மேலதிக கடமைகளுக்கான படி என்பவற்றைக் கொடுப்பனவு செய்யும்போது, அடிப்படைச் சம்பளத்துக்கதிகமாக வழங்கப்படலாகாது. எனினும், அமைச்சின் 2013 ஆம் ஆண்டு மே மாத சம்பளக் கொடுப்பனவுப் பொழிப்பின் பிரகாரம், அந்த எல்லையை மீறி ரூபா. 35,717,477 வழங்கப்பட்டுள்ளது. |
| 26.3ஆம் பந்தி | 631,187 | குருநாகல் போதனா வைத்தியசாலையால் 3 சந்தர்ப்பங்களில வாகனத் திருத்தம் தொடர்பாக அமைச்சினது செயலாளரின் அங்கீகாரமின்றிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

**1.7** <u>செயற்திட்டங்களை செயற்படுத்துவதிலுள்ள நலிவுகள்</u>

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட முதலீட்டு செற்திட்டங்கள்.

வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் கீழ் அமைச்சு பின்வருமாறு ரூபா 8,151,823,805 தொகையை செலவிட்டிருந்தது.

| **நிதி மூலங்கள்** | **செயற்திட்டங்களின் எண்ணிக்கை** | **செலவினம்**<br>**ரூபா.** |
|---|---|---|
| கடன் செயற்திட்டங்கள் | 18 | 6,143,881,156 |
| உதவிச் செயற்திட்டங்கள் | 24 | 2,007,942,649 |
| **மொத்தம்** | | **8,151,823,805** |

(i) வெளிநாட்டு கடன் செயற்திட்டங்கள் 18 க்காக ரூபா 5,071,800,000 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 6,143,881,156 செலவிடப்பட்டிருந்தது. அதில் 04 செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு ரூபா 763,800,000 நிதியேற்பாடு செய்யப்பட்டபோதும், அச்செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்படவில்லை. நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதி வழங்கலின் பேரில் அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலிய மாவட்ட பொது வைத்தியசாலை அபிவிருத்திச் செயற்திட்டம் உள்ளடங்கலான 03 கடன் செயற்திட்டங்களுக்கு ரூபா 1,485,000,000 ஒதுக்கப்பட்டிருந்து. செயற் திட்டவரைவின் பலவீனம் காரணமாக ஒதுக்கீட்டுத் தொகையை விட ரூபா 2,841,880,588 மேலதிகமாக அதாவது, ரூபா 4,326,880,588 செலவிடப்பட்டிருந்தது.

அவ்வாறு மேலதிகமாக செலவிடப்பட்ட தொகை ஒதுக்கப்பட்ட தொகையின் 191 சதவீதமாகும்.

(ii) முதற் கட்ட சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தற் செலவு விடயத்தின் கீழ் ரூபா 190,612,126 செலவிடப்படடிருந்து. அதில் உயிரியல் மருத்துவப் பொறியியலாளர் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 71,449,892 பெறுமதி வாய்ந்த உபகரணங்களில் ரூபா 7,471,794 பெறுமதி வாய்ந்த மருத்துவ உபகரணங்களின் 04 வகைக்குரிய 60 அலகுகள், 2014 சனவரி 8 ஆம் திகதி கிடைக்கப்பெற்றிருந்தன. 2014 செப்டெம்பர் 24 ஆம் திகதியளவில் அவ்வுபகரணங்கள் பெறப்பட்டு ஏறக்குறைய 8 மாதங்களாகியபோதும், அவ்வுபகரணங்கள் உயிரியல் விஞ்ஞான பொறியியலாளர் பிரிவுக் களஞ்சிய சாலையில் பாவனைக்கு எடுக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தன.

(iii) தள வைத்தியசாலைகளில் திறன் முகாமைத்துவ அலகுகளை நிறுவுவதற்கு, 2013 ஆம் ஆண்டில் ரூபா 10 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதும், 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,346,611 செலவு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 802,448 செயலமர்வுகளை நடாத்துவதற்கு செலவிடப்பட்டிருந்தது. அதன்படி ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபா 8,653,389 மீதமாக இருந்தது.

(iv) சுகாதார சேவைகளின் பயனுறுதி, திறத்தன்மை மற்றும் கொள்ளளவினை மேம்படுத்துவதற்கும், சுகாதாரப் பாதுகாப்புக்காக வறியவர்கள் செலவிடுகின்ற செலவினைக் குறைப்பதற்கும் என சுகாதாரப் பிரிவின் இரண்டாம் அபிலிருத்தி வேலைத்திட்டத்துக்கான முன்னாயத்த எற்பாடுகளுக்கென இலங்கை அரசுக்கு உதவித் தொகை வழங்கும் நோக்குடன், உலக வங்கி உதவித்திட்டத்தின் கீழ் விஷேட டொலர் கணக்கிற்கு ரூபா 53,321,760 (ஐ.அ.டொ. 400,000), வரவு வைக்கப்பட்டிருந்தது. அந்நிதியை செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாது, திறைசேரி 2014 பெப்ரவரி 03 ஆம் திகதி ரூபா 11,468,796 (ஐ.அ.டொ. 87,711) ஐ சர்வதேச அபிவிவிருத்திச் சங்கத்துக்குத் (ஐ.டீ.ஏ) திருப்பி அனுப்பியிருந்தது.

(v) அமைச்சினால் மீளாய்வாண்டின்போது செயற்படுத்துவதற்கென திட்டமிடப்பட்டிருந்த வெளிநாட்டு உதவியுடன் கூடிய 24 செயற்றிட்டங்களுக்கென ரூபா 3,289,135,000 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 2,007,942,649 செலவிடப் பட்டிருந்ததுடன், ரூபா 1,281,192,351 எஞ்சியிருந்தது. இது செயற்திட்டத்திற்கான மொத்த நிதியேற்பாட்டில் 38.9% சதவீதமாகும்.

## 1.8 <u>வங்கிக் கணக்குச் செயற்பாட்டில் உள்ள குறைபாடுகள்</u>

<u>சீராக்கல் செய்ய வேண்டிய மீதிகள்</u>

சுகாதார அமைச்சின் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்த சீராக்கல் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் புலனாகிய தகவல்கள் பின்வருமாறு.

| | | காலப் பகுப்பாய்வு | | |
|---|---|---|---|---|
| | | 6 மாதங்களுக்கு மேல் 1 வருடத்திலும் குறைவு | 1வருடத்துக்கு மேல் 2வருடத்திலும் குறைவு | மொத்தம் |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | இனங் காணப்படாத வைப்புகள் | 1,293,583 | 6,428 | 1,300,011 |
| (i) | வழங்கப்பட்டு, கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 1,127,990 | 106,214 | 1,234,204 |
| (ii) | இனங் காணப்படாத செலவு | 635,830 | 9,650 | 645,480 |
| (iii) | இனங்காணப்படாத வரவு | 54,566 | - | 54,566 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 387 இன் பிரகாரம், அரசாங்க வங்கிக் கணக்கொன்றிலிருந்து வங்கி மேலதிகப் பற்று பெறுவது தடைசெய்யப்பட்டுள்ளது. எனினும், அமைச்சின் 02 வங்கிக் கணக்குகளிலிருந்து அவ்வாறான வங்கி மேலதிகப்பற்று பெறப்பட்டுள்ளது என்பதை, வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்ட இனங்காணப்படாத கொடுப்பனவின் கீழ் உள்ள ரூபா 5,875 மேலதிகப்பற்று வட்டி மூலம் உறுதியாயிற்று.

(ஆ) வழங்கப்பட்டு 06 மாதங்கள் கடந்துவிட்ட 22 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 1,234,204 பெறுமதியான 136 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 396(ഥ) இன் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியிளவிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

1.9 <u>சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்</u>

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மை வாய்ந்தவை. தெரிவுச் செய்கைகளில் அவதானிக்கப்பட்ட அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறு.

(அ) மருத்துவர்களுக்கு மாதாந்தம் கொடுக்கப்படும் ரூபா 25,000 ஓய்வு நேரப் பணிகளுக்கான உதவிப் பணம், போக்குவரத்து மற்றும் சமூகமளித்ததற்கான கொடுப்பனவு ஆகியவற்றை மகப்பேற்று விடுமுறையில் இருக்கும் பெண் மருத்துவர்களுக்கு அவர்களின் மகப்பேற்று லீவு காலத்தில் கொடுக்க முடியாதென தாபனப் பணிப்பாளர் நாயகம் அவரது EST/8/ALLOW/03/281/132 ஆம் இலக்க 2012 மே 23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்திருந்தார். எனினும், அதனைக் கருத்தில் எடுக்காது, அக்கொடுப்பனவுகளைச் செலுத்துமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் Health Ministry Ca/191 ஆம் இலக்க 2013 ஜூலை 26 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சின் கீழ் செயற்படும் சகல

நிறுவனத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார். 1995 அம் ஆண்டின் அமைச்சரவைத் தீர்மானம் இதற்கான அடிப்படையாகக் கருதப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஏப்ரல் 07ஆம் திகதிய 45ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கையின் 3.11ஆம் பந்தியின் பிரகாரம், ஆய்வுப் பரிசோதனைகளுக்கான கொடுப்பனவுகளைப் பெற தகுதியுடைய உத்தியோகத்தர்கள் 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 6/2006 ஆம் இலக்க பொதுநிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் சிரேஷ்ட மட்டப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்டவர்களே அதன்படி அச் சுற்றறிக்கையின் II ஆம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மருத்துவ நிர்வாகிகளும், நிபுணத்துவ மருத்துவ அதிகாரிகளும், நிபுணத்துவ பல் வைத்தியர்களும் இதில் அடங்குவர். இவ்வேற்பாடுகளுக்கு முரணாக சிரேஷ்ட தரம் அல்லாத 156 மருத்துவர்களுக்கும் ஆய்வுப் பரிசோதனைக் கொடுப்பனவு என ரூபா 10,050,884 கூட்டுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

## 1.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் நடைமுறைகளிலிருந்து விலகுதல்

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.11 ஆம் வழிகாட்டலின்படி, ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள வழங்குனர்கள் தொடர்பான தரவுகள் பேணப்படுவதனூடாக அவ்வாறான வழங்குனர்கள் மீண்டும் ஒப்பந்தங்கள் பேரில் முன்வருதல் தவிர்க்கப்படலாமெனினும், மருத்துவ வழங்கல் பிரிவில் அவ்வாறான ஆவணமொன்று பேணப்படவில்லை. அவ்வாறு கொள்வனவுக் கட்டளை வழங்கப்பட்ட கையிருப்பு வழங்கப்படாதிருக்க மீண்டும் கேள்வி கோரப்பட்டிருந்த 09 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

- வழங்குனர்கள் மருந்து விநியோகிப்பதை புறக்கணித்ததால் மருத்துவ வழங்கல் பிரிவின் கையிருப்புப் பற்றாக்குறையும் வைத்தியசாலைகளுக்கான மருந்து விநியோகத் தாமதங்களும் காணப்பட்டன.

- அரசாங்க கொள்வனவு வழிகாட்டற் கோவையின் 5.3.11ஆம் பந்தியின் பிரகாரம், வழங்குனர்களிடமிருந்து விலை மனுகளுக்கான பாதுகாப்பு வைப்பு அறவிடப்படாத காரணத்தால், மேற்படி 09 சந்தர்ப்பங்களிலும்

மருந்து விநியோகிக்காத வழங்குனர்களிடமிருந்து அது தொடர்பில் அறவிடப்படத்தக்க, ரூபா 11,340,736 பணத்தை அறவிட முடியாதிருந்தது.

(ii) ரூபா 390,197,820 பெறுமதி வாய்ந்த 07 வகையான மருத்துவ உபகரணங்களை உள்ளடக்கிய 343 உருப்படிகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளின் போது, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவு கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 4.2.3. க்கு அமைய, குறிக்கப்பட்ட கால வரையறை விதித்திருந்த போதிலும், அக் கால எல்லையையும் தாண்டி, 12 முதல் 58 கிழமை வரையிலான காலத்தை அச் செயற்பாடு தொடர்பில் எடுத்திருந்தனர். கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட எல்லாக் கொள்வனவுகளுக்கும் அதிகளவு காலம் கடத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், அதனைத் தவிர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கொள்வனவு நடவடிக்கைகளில் காணப்பட்ட காலதாமதம் தொடர்பாக கவனிக்கப்படாமல் விடப்படுவதானது கொள்வனவுச் செயற்பாட்டின் செயற்திறனான நேரடியாக பாதித்திருந்தது.

(iii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 8.7.1.(அ) பந்தியின் படி, ஒப்பந்தத்தை வழங்க முன்னர், ஒப்பந்தத்தை நிறைவேற்றி முடிக்கத் தேவையான அளவு நிதி ஒதுக்குதல்கள் காணப்படுகின்றது என்பதற்கான நிதி வளம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எனினும், சப்ரகமுவ மாகாண அபிவிருத்திச் செயற்திட்டத்துக்கு 2012 இன் வரவு செலவுத் திட்டத்தின் மூலம், மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கென ரூபா 35 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்நிதி ஏற்பாட்டை கருத்தில் கொள்ளாமல் 38 மருத்துவ உருப்படிகளுக்கென ரூபா 94,536,550 பெறுமதி வாய்ந்த மருத்துவ உபகரண கொள்வனவு செய்வதற்கான கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்.

---

பேராதனை போதனா வைத்தியசாலையின் 2012 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 8,701,443 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் மீளாய்வாண்டின் போது 19 சந்தர்ப்பங்களில் செலுத்தியுள்ளனர். இதற்கு நி.பி 115 இன் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

1.11 <u>நட்டங்களும் சேதங்களும்</u>

தெரிவுக் கணக்காய்வின்போது தெளிவாகிய நட்டங்களும் சேதங்களும் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

(அ) 51 உத்தியோகத்தர்கள் ஆய்வுப் பரிசோதனைகளை ஆரம்பித்து விட்டு 03 மாதம் முதல் 10 மாத இடைவெளிக் காலங்களுக்கான உதவித் தொகைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்பு ஆய்வுப் பரிசோதனைகளை இடை நடுவில் கைவிட்டிருப்பதுடன், இவ்வாறு இடை நடுவில் கைவிடப்பட்ட ஆய்வுப் பரிசோதனைகளுக்கான உதவித் தொகையாக ரூபா 2,278,743 படி அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. இதனால் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது.

(ஆ) திகன மருந்துப் பொருட் களஞ்சிய சாலையில் 2013 ஜுன் 13 ஆம் திகதியில் ரூபா 18,368,457 பெறுமதி வாய்ந்த காலாவதியான மருந்துகள் மற்றும் 46 அறுவைச் சிகிச்சை உபகரணங்கள் ஆகியவை களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தது. அதில் ரூபா 11,969,473 பெறுமதி வாய்ந்த 22 மருந்துப் பொருட்கள் அடங்கிய தொகை காலாவதியாகி ஒரு வருடத்துக்கும் மேல் நாட்சென்றவைகளாகும். இதன் காரணமாக களஞ்சிய சாலையில் தேவையற்ற முறையில் இட வசதியீனம் ஏற்படுத்தப்பட்டதுடன், அந்நட்டம் தொடர்பில் நிதிபிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவுமில்லை.

(இ) நிபுணத்துவ மருத்துவர்கள் இடமாற்றம் பெற்று சென்றமை, மருந்துப் பொருட்களுக்கான கேள்வி குறைந்தமை, ஆயுட்காலம் குறைந்த மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தமை, வருடம் முழுவதற்குமென மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தக் தொகையும் ஒரே முறையில் விநியோகிக்கப்பட்டிருந்தமை போன்ற காரணங்களினால் 05 வைத்தியசாலைகளுக்குமான ரூபா 1,388,435 பெறுமதி வாய்ந்த 69 மருந்துப் பொருட்களின் மொத்தத் தொகை காலாவதியாகியிருந்தது.

(ஈ) 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற வேலை நிறுத்தங்கள் காரணமாக வேலை நிறுத்தம் மேற்கொண்ட வைத்தியசாலை அலுவலர் குழாம் நிறைவேற்ற வேண்டிய மருத்துப் பரிசோதனை கருமங்களை தனியார் மருத்துவமனைகள் மூலம் செய்து கொள்ள வேண்டி ஏற்பட்டதன் காரணமாக, தேசிய வைத்தியசாலையிலிருந்து தனியார் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி, வைத்திய பரிசோதனைகளுக்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 6,243,278 ஆகக் காணப்பட்டது.

(உ) 2010 ஜுன் 18 ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தின் காரணமாக, கொழும்பு போதனா வைத்தியசாலைக்கு சொந்தமான நோயாளர் காவு வண்டி விபத்துக்குள்ளாகியமையால் ஏற்பட்ட நட்டம் ரூபா 27,000 ஆகும். இந்நட்டத்தினை குறித்த கட்சிக்காரரிடமிருந்து அறவிட்டிருக்கவில்லை.

(ஊ) அரசாங்க மருந்தக கூட்டுத்தாபனம் மருந்துப் பொருட்களை விநியோகம் செய்வதில் காலதமாகியதன் காரணமாக மருத்துவ வழங்கல் பிரிவு பிரதேச ரீதியில் கொள்வனவு செய்த மருந்துப் பொருட்கள் மற்றும் அறுவைச் சிகிச்சைக்காக

பயன்படுத்தும் 44 பொருட்களுக்குமாக செலவிடப்பட்ட தொகை ரூபா 222,326,307 ஆகவும் அரசாங்க மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் விலையை விடவும் கூடுதலான தொகையை இதன்போது கொடுக்கவேண்டி எற்பட்டது. இவ்வாறு கூடுதலாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 78,800,680 ஆகும்.

(எ) சுகாதார அமைச்சுக்குரிய, வைத்தியசாலைகளுக்கான விநியோகம் தொடர்பில் கொள்வனவு செய்யப்பட்ட 06 லெப்ரஸ்கோப் கருவிகளை உரிய தினத்தில் சுங்கத்திலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்காததன் காரணமாக, களஞ்சியக் கட்டணம் என மேலதிகமாக, ரூபா 84,120 செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. இரண்டு தினங்களுக்குள் அக்கருவிகளை சுங்கத்திலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் களஞ்சிய கட்டணம் செலுத்த வேண்டிய தேவை எற்பட்டிருக்காது என்பதுடன், பொறுப்புக்கூறவேண்டிய உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக, ரூபா 84,120 நிதி ரீதியான நட்டம் எற்பட்டிருந்தது.

(ஏ) மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரினால் சப்ரகமுவ மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்கென, அமைச்சுக்கு முன்மொழியப்பட்ட ரூபா 35 மில்லியன் செலவிலான 53 மருத்துவ உபகரணங்களின் கொள்வனவின் போது, ஒரே நாளில் செய்ய முடியுமான ஆற்றல் காணப்பட்ட போதிலும், அவ்வாறு செய்யாமல் 04 சந்தர்ப்பங்களில் விளம்பரம் செய்யப்பட்டமையினால் அரசாங்கத்துக்கு அதிகூடிய ஒரு தொகையான ரூபா 361,256 நட்டம் ஏற்பட்டுள்ளது.

ஐ) கண்டி போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் கதிர்வீச்சு மருத்துவ முறை அலகில், 2013 நவம்பர் 25ஆம் திகதியன்று பௌதீக கணக்காய்வுப் பரிசோதனை நடைபெறும் போதும் காலாவதியான 20 Steritah Black Patient Markers பெட்டிகள் பாவனைக்கு எடுக்காமல் விடப்பட்டதன் முலம் காலாவதி ஆகியிருந்தன. இவற்றின் மொத்தப் பெறுமதி 70,000 ரூபாவாகும்.

1.12. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனைகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட சிக்கனமற்ற முறையில் செய்யப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

(அ) திரிபோஷ நிறுவனத்தின் பாவனைக்காக வாகனம் ஒன்று கோரப்பட்டிருந்தது. அவ்வேண்டுகோள் தொடர்பில் 12 மில்லியனுக்கு இரண்டு கெப் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பொது முயற்சிகள் திணைக்களத்தினால் 3200 CC இயந்திர வலுடன் கூடிய 02 வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டிருந்தது. அவ்வங்கீகாரத்திற்கு புறம்பாக 2500 CC இயந்திர வலுவுடன் கூடிய இரண்டு கெப் வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன்

பிரகாரம் தேவைப்பாட்டை மிகைத்து குறைந்த இயலளவுடைய வாகனமொன்றிற்காக ரூபா 6 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) வைத்தியசாலையின் பாவனைக்கென கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 90,465,900 விலையில் 1000 KVA சக்தி வாய்ந்ததும், கூடிய விலையுள்ளதும், கொள்கலனின் அகத்திடப்பட்டதும் (containerized), சப்தமின்றி இயங்கவல்லதும், (sound proof) தனியாக பொருத்தப்பட வேண்டியதுமான (Standalone) மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் உயர் தரத்தினையுடைய (High Quality) மின் பிறப்பாக்கி இயந்திரமொன்றை திரிபோசா உற்பத்தி செய்யப்படுகின்ற தொழிற்சாலை ஒன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் சேவைகள் மற்றும் ஒரு சிக்கனம் பராமரிப்பு செலவாக ரூபா 8,037,008 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 5 ஆண்டுகளுக்காக கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்த சேவைகள் மற்றும் பராமரிப்பு செலவினம் ரூபா 28,692,400 ஆக இருந்தது. தொழிற்சாலையொன்றிற்காக உயர்தரத்திலான அதிக சேவைக் கட்டணங்களுடன் கூடிய மின்பிறப்பாக்கி இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டமை சிக்கனமற்ற செலவினமொன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) 2012 ஆம் ஆண்டில் முடிவுற்றிருந்த 02 செயற்திட்டங்களின் பதவியணியினருக்கு 2013 ஆம் ஆண்டிலும் ஊதியமாக ரூபா 3,340,882 கொடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) குருநாகல் போதனா வைத்தியசாலையின் நிபுணத்துவ மருத்துவர்களுக்கும் ஏனைய மருத்துவர்களுக்குமான உத்தியோகபூர்வ வாசஸ்தல வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு போதுமான அளவு உத்தியோகபூர்வ இல்லங்கள் வைத்தியசாலையில் காணப்படாமையாலும், மற்றும் புதிதாக நிர்மாணிப்பதற்கான வேலைத்திட்டங்கள் எதுவும் காணப்படாத காரணத்தினாலும், வருடாந்தம் இதற்கென பாரிய செலவொன்றினைச் செய்ய வேண்டி எற்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டினுள் மாத்திரம் 15 மருத்துவர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக ரூபா 1,722,000 பணம் வெளி தரப்பினருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

1.13. <u>தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்தி</u>

அமைச்சுக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அறிக்கைகளில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படாததுடன், அவ்வாறான பந்தியொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| வருடம் | பந்தி இலக்கம் | |
| 2007 | 6.6(உ)xiii | அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திலிருந்து மருந்துகள் வழங்கல் பிரிவுக்கு மருந்துப் பொருட்களை போக்குவரத்து செய்யும் போது ஏற்பட்டிருந்த ரூபா 10.7 மில்லியன் பற்றாக்குறையை வழங்குனர் களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

1.14 முகாமைத்துவ பவீனங்கள்

சுகாதார அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் முகாமைத்துவ பலவீனங்கள் கண்டறியப்பட்டன.

(அ) சுகாதார அமைச்சு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திலிருந்து மருந்துப்பொருட்கள் மற்றும் சத்திரசிகிச்சைக்கான பொருட்கள் கொள்வனவு

மருத்துவ வழங்கல் பிரிவிற்காக மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள் என்பவற்றை அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான தெரிவு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

- அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழுவினால் (SCAAP) மருந்துப் பொருள் விநியோகப் பிரிவுக்கு தேவைப்படும் மருந்துப் பொருட்கள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களை அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திலிருந்து

கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டில் 11 சந்தர்ப்பங்களில் ரூபா 150 மில்லியனுக்கான கொள்வனவு இடம்பெற்றிருந்ததுடன், அதில் 2 சந்தர்ப்பங்களில் செய்யப்பட்ட கொள்வனவுகள் மாத்திரம் வெற்றியளித்திருந்தது. மிகுதி 9 கொள்வனவு சந்தர்ப்பங்களும் தோல்வியடைந்துள்ளது. அதில் 4 கொள்வனவுகள் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தும், அதன்படி அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்படவில்லை மேலும் 4 கொள்வனவுகளுக்கு அமைச்சரவை ரத்துச் செய்திருந்ததுடன், எஞ்சிய கொள்வனவு அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி கருமமாற்றியதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

- மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சைக்கான உபகரணங்கள் அடங்கிய 518,900,000 அலகுகளுக்காக 11 விலைமனுக் கோரல் மூலம், ரூபா 3,307 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதி கொண்ட மருத்துவ உபகரண அலகுகளை வழங்கல் பிரிவினால் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்கு கட்டளை அனுப்பியிருந்தது. அதில் ரூபா 2646 மில்லியன் பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்ட 85,400,000 அலகுகளைக் கொள்வனவு செய்வதற்கான 8 விலை மனுக்கோரல்கள் வெற்றியளிக்காமையால் மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. போதியளவு மருந்துகள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு கிடைக்காத காரணத்தால் நோயாளர்களுக்கான மருத்துவ சிகிச்சை சேவைகள் தகுந்த முறையில் நிறைவேற்றப்படவில்லை என்பதுடன், மருத்துவ விநியோகப் பிரிவு 02 வகையான மருந்துகளை உள்நாட்டில் கொள்வனவு செய்கையில், முறையே ரூபா 2,572,400 மற்றும் ரூபா 3,836,664 என்றவகையில் ரூபா 6,409,064 அதிக விலை கொடுக்கப்பட்டிருந்தது.

- மருத்துவ வழங்கல் பிரிவினால் மருந்துகள் மற்றும் அறுவைச் சிகிச்சைக்கான பொருட்களின் வருடாந்த தேவைப்பாட்டை கூட்டுத்தாபனத்துக்கு அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து அமைச்சரவையினால் தீர்மானம் எடுக்கப்பட்ட தினம் வரையில் விலை மனுக்கோரல் செயல்முறைக்கான அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டற் கோவையின் 4:2:3 ஆம் பந்திக்கு அமைய, இதற்கென எடுக்கப்படவேண்டிய காலம் 07 மாதம் வரையிலானது என இருந்த போதிலும் அரசாங்க அருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் கொள்வனவுக் குழுவிற்கு கிடைக்க கேள்வி மனுக்களில் கொள்வனவு மதிப்பிட்டு நடவடிக்கைகளுக்காக அக்கேள்வி மனு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய அமைச்சு இதற்கென 09-18 மாதங்கள் வரை எடுத்திருந்தது. அதன் படி மருத்துவ வழங்கல் பிரிவின் கால அட்டவணைக்கு ஏற்ப மருந்துப் பொருட்கள் கட்டளையிடப்பட்டு ஒரு வருடம் கழிந்த பின்பே சரக்குகள் வந்து சேரும் என எதிர்பார்த்து இருந்த போதும் அமைச்சினால் கொள்வனவு மதிப்பீட்டிற்கு கூடிய காலதாமதம் எடுக்கப்பட்டமையால்

மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்கு ஓராண்டிற்குள் மருந்துகளை வழங்க இயலாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் ஆகிய இரு நிறுவனங்களின் இணக்கத்தின் படி, மருத்துவ தேவைப்பாடுகள் எதிர்பார்க்கப்படும் நாளிலிருந்து ஒரு வருட காலத்துக்கு முன்னர், மருத்துவ வழங்கல் பிரிவின் மூலம் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்கு கொள்வனவுக் கட்டளைகள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும், அதேபோல் கூட்டுத்தாபனத்தினால் மருத்துவ வழங்கல் பிரிவுக்கான மருந்துப் பொருட்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்ட தினத்திலிருந்து 11 மாத காலத்தினுள் குறிக்கப்பட்ட நேரங்களில் அனுப்பி வைக்க வேண்டும் அது அவ்வாறு இருந்த போதிலும், அமைச்சரவையின் கொள்வனவுக்குழு மூலம் பெற்றுக்கொள்ளும் மருந்துப் பொருட்களின் பேரில் 17 மாதங்கள் தொடக்கம் 26 மாதங்கள் வரையிலான காலம் எடுக்கப்படுவதனால் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு, குறித்த காலத்தில் மருந்துப் பொருட்கள் விநியோகிப்பதற்கான பொறுப்பு 06 மாதம் முதல் 15 மாதம் வரையிலான கால தாமதத்தின் பின்னரே இடம் பெறுவதாக அவதானிக்கப்பட்டது.

**(ii) <u>பிரதேச ரீதியாக மருந்துகளை கொள்வனவு செய்தல்</u> (LP)**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- மருத்துவ வழங்கல் பிரிவினால் அனுப்பப்படும் கொள்வனவுக் கட்டளைகள் எதிர்பார்க்கப்பட்ட திகதியில் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் வழங்காததன் காரணமாக, பெரும்பாலான மருந்துப் பொருட்களின் மாதாந்த வேண்டுகோள்களுக்கு ஏற்ப, குறித்த வைத்தியசாலைகளுக்கும் சுகாதார நிறுவனங்களுக்கும் விநியோகிக்க முடியாதுள்ளது. அவ்வாறு 11 வகையான மருந்துப் பொருட்கள் வந்து சேர 03 மாதம் முதல் 1 வருடம் 9 மாதம் வரையான வீச்சில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

- மருத்துவ வழங்கல் பிரிவு வருடாந்த மருந்துப் பொருட்களுக்கான கோரிக்கைகள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு கொள்வனவுக் கட்டளைகள் மூலம் அனுப்பப்படும்போது, 12 மாத காலத்துக்கு முன்னர் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்கு கொள்வனவுக் கட்டளை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என இருந்த போதிலும், மருத்துவ விநியோக பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த 05 கொள்வனவுக் கட்டளைகள் 04 மாதம் முதல் 09 மாதம் வரையிலான கால இடைவெளிக்குள் மருந்துப் பொருட் கோரிக்கைகளுக்கான வழங்கல்களைச் செய்யுமாறு கேட்கப்பட்டிருந்தது. அதன்படி, கொள்வனவுக் கட்டளையைச் சமர்ப்பிக்கும் போது 03 மாதம் முதல் 08 மாதம் வரையிலான கால தாமதம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

- மருந்து விநியோகப் பிரிவு, அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து கோரப்படும் வருடாந்த மருந்துப் பொருட்களுக்கான விநியோகத்தின்போது ஏற்படும் காலதாமதத்தினால், வைத்தியசாலைகளுக்கான மாதாந்த மருந்துத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. அதன்படி, 06 மாதத்தில் 12 வகையான மருந்துப் பொருட்களில் 32,217,926 அலகுகள் விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 11,293,293 அலகுகளே விநியோகக்கப்பட்டிருந்தன. அதன்படி 20,924,633 அலகுகள் விநியோகிக்கப்படவில்லை. இது விநியோகக்கப்பட வேண்டிய அளவிள் 65 வீதமாகும். வைத்தியசாலைகள் அவற்றின் வருடாந்த மருந்துத் தேவைகளை வருடாந்தம் மதிப்பீடு செய்து மருத்துவ வழங்கல் பிரிவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தபோதும், அம் மருந்துகளை அவ்வேண்டுகோள் விடுக்கப்பட்ட அளவில் மருந்துகளை விநியோகிக்க மருத்துவ வழங்கல் பிரிவு தவறியுள்ளது.

- Epidural Catheter Size 18G (SR No.- 561200) மட்டமானிகள் 1778 இனை பிரதேச ரீதியாகக் கொள்வனவு செய்தபோது, இரண்டாவதாக குறைந்த விலை சமர்ப்பித்திருந்த விநியோகஸ்தரிடமிருந்து உடனடியாக (Immediately) கொள்வனவு செய்யப்படவேண்டிய 763 மட்டமானிகளுக்கு மாத்திரம் கொள்வனவுக் கட்டளையை அனுப்பிவிட்டு, மிகுதி 570 மட்டமானிகளையும் மிகக் குறைந்த விலை சமர்ப்பித்திருந்த வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் அரசாங்கத்துக்கு ரூபா 233,700 நட்டம் ஏற்பட்டுள்ளது.

- 2012 ஆம் ஆண்டின் முன்னுரிமைப் பட்டியலுக்கு அமைய, சுகாதார அமைச்சுக்குரிய வைத்தியசாலைகளுக்கு விரைவாக லெப்ரஸ்கோப்களை கொள்வனவு செய்வதற்கு சுகாதார செயலாளரினால் 2011 நவம்பர் 11 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. உயிரியல் விஞ்ஞானப் பிரிவு 398,240 யூரோவுக்கு அதாவது இலங்கைப் பெறுமதி ரூபா 66,629,252 இற்கு 06 லெப்ரஸ்கோப்களைக் கொள்வனவு செய்திருந்ததுடன், இவ் உபகரணங்களை உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவைப் பிரிவிடம் 2013 மே 03 திகதியன்று கையளித்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

  - அவசர தேவைக்கு எனக் கொள்வனவு செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டபோதிலும், கொள்வனவு செயற்பாட்டை பூர்த்தி செய்ய 1½ வருடங்கள் கடந்துள்ளது.
  - அரசாங்க கொள்வனவு வழிகாட்டற் கோவையின் 4:2:3 கொள்வனவு வழிகாட்டலின் பிரகாரம் கொள்வனவு கால அட்டவணைக்கு அமைவாக ரூபா 25 மில்லியனுக்கும் 100 மில்லியனுக்கும் இடைப்பட்ட கொள்வனவு செயற்பாடொன்றின் நியாயமான கால அளவு 43 கிழமைகள் மாத்திரமே எடுக்கப்பட வேண்டும் என்ற

போதிலும், இக் கொள்வனவு செயற்பாட்டுக்கு 77 கிழமை அளவு காலம் எடுக்கப்பட்டிருந்தது.

- இவ் உபகரணம் 2012 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாட்டின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கொள்வனவுச் செயற்பாடுகளில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக, 2013 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாடுகளிலிருந்து இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

- கண்டி போதனா வைத்தியசாலையினால் மருத்துவ விநியோகப் பிரிவு விநியோகிக்கும் விலையிலும் கூடுதலாக ரூபா 7,512,528 வினை மேலதிகமாக கொடுத்து 13 வகையான மருந்துப் பொருட்களை உள்ளூரில் கொள்வனவு செய்திருந்தது.

**(iii) கூடுதலாக சம்பளம் மற்றும் படி செலுத்தல்**

-----------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- மருத்துவ பட்டப்பின் கற்கை நெறியை தொடர்வதற்கு 2013 ஆம் ஆண்டு சம்பளமற்ற விடுமுறை எடுத்திருந்த இரண்டு மருத்துவர்களுக்கு ரூபா 547,535 சம்பளமாகக் கொடுக்கப்பட்டிருந்தது. மேலும், மருத்துவ பட்டப்பின் கற்கை நெறியைத் தொடர்வதற்கு 2011 மற்றும் 2012 ஆம் வருடங்களில் சம்பளமற்ற விடுமுறை எடுத்திருந்த 06 மருத்துவர்களுக்கும் ரூபா 3,494,797 சம்பளமாக கொடுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில், அவற்றில் ரூபா 640,725 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. மேலும் அமைச்சிலிருந்து சம்பளம் பெறும் மருத்துவ உத்தியோகத்தர்கள் இருவருக்கு 02 சம்பள இலக்கங்களின் கீழ் சம்பளம் தாயார்படுத்தப்பட்டு, ரூபா 582,562 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

- சுகாதார அமைச்சின் அலுவலர் குழாத்துக்குரிய முற்பணம் மற்றும் விடுமுறை கால சம்பளம் என 2013 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டிலிருந்து ரூபா 58,000,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அந்த ஏற்பாட்டை ரூபா 23,701,275 இனால் மிகைத்து ரூபா 81,701,275 பயன்படுத்தப்பட்டிருந்து. அதேபோல் அலுவலர் ஒருவருக்கு ஒரே தினத்தில் மேலதிக நேரவேலை மற்றும் அரசாங்க விடுமுறை தினம், வார இறுதி விடுமுறை தினங்களில் பணியாற்றியமைக்காக செலுத்தப்படும் 1/20 படி தொகை ஆகிய இரண்டும் செலுத்தப்பட்டிருந்தன.

- அமைச்சினால் சம்பளம் கொடுக்கப்படும் மின் உயர்த்தி இயக்குபவர்கள் மூவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், அமைச்சில் மின் உயர்த்தியை செயற்படுத்துவதற்கு இயக்குனர் காணப்படாமை தெரியவந்துள்ளதுடன், அவர்கள் குறித்த பணியில் ஈடுபடுத்தப்படாமல் சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளதுடன்,

அவர்களுக்கு வருடாந்த சம்பள உயர்வுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2013 ஜனவரி தொடக்கம் 2014 ஏப்ரல் மாதம் வரை மின் உயர்த்தி இயக்குபவர்கள் மூவருக்கும் ரூபா 1,053,304 செலுத்தப்பட்டுள்ளது. இதில் ஒருவர் எங்கு வேலை செய்கிறார் என்றோ எந்த அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(vi) 2004 பெப்ரவரி 19 ஆம் திகதிய, 01-02/2004(ii)ஆம் இலக்க சுகாதார போசணை மற்றும் நலன்புரி அமைச்சின் செயலாளரினால் அனுப்பிவைக்கப்பட்ட சுற்றறிக்கையின் முலம், 2004 பெப்ரவரி 02 ஆம் திகதிய, 01-02/2004 ஆம் இலக்க பொதுச் சுற்றறிக்கையில் கவனம் செலுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட உத்தேசத்திற்கமைய 65 சதவீத்தினை 2004 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்தும், 15% சதவீதத்தை ஏப்ரல் 01 ஆம் திகதியில் இருந்தும் செலுத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்ததுடன், மிகுதி 20 சதவீதம் தொடர்பில் எதுவும் அச்சுற்றறிக்கையில் கூறப்பட்டிருக்கவில்லை. 2005 ஆகஸ்ட் 07 ஆம் திகதி எச்எம் / ஏடீ /ஏஎஸ் 2002 ஆம் இலக்க சுகாதார அமைச்சின் செயலாளரின் கடிதத்தினுடாக, 2/130/2005/(9 /2004 ) ஆம் இலக்க சுற்றிக்கையின் பிரகாரம், சம்பள உருவாக்கலின் போது இம் மீதியை சம்பளத்துடன் சேர்த்துக்கொடுக்க வேண்டாமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக சம்பளம் கணிக்கப்பட்டதன் காரணமாக, 2005 ஆம் ஆண்டில் 04 வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு கூடுதலாக சம்பளம் கொடுக்கப்பட்டிருந்தது.

**(iv) அரசாங்க வைத்தியசாலைகளினால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை அபிவிருத்தி செய்தல்.**

2012 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் மூலம் அரசாங்க வைத்தியசாலை வலைப் பின்னல்களினால் வழங்கப்படும் சேவைகளின் தரச் சிறப்புகளை மேம்படுத்தும் நோக்கில் ரூபா 1,000 மில்லியனை நிதி ஏற்பாடு செய்வதற்கான யோசனை முன்மொழியப்பட்டிருந்த போதிலும், ரூபா 667 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இவ் ஒதுக்குதல்களிலிருந்து 09 மாகாணங்களுக்கும் முற்பணமாக, ரூபா 182,773,800 முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டு முடிவின் போது, நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்களின் செயலாற்றுகைகளின் பெறுமதி, ரூபா 81,058,765 ஆக காணப்பட்டது. இதன்படி, ரூபா 101,715,035 இற்கான வேலை விபரங்கள் சமர்ப்பிக்கப் படாதிருந்ததுடன், செயன்முன்னேற்றம் 44 வீதமாக காணப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகையிலிருந்து சப்ரகமுவ மாகாணத்துக்கென 2012 மற்றும் 2013 ஆகிய இரு வருடத்துக்குமென ரூபா 60 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. சப்ரகமுவ மாகாண சுகாதார சேவை பணிப்பாளரினால்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த மொத்த விலைப்பட்டியல்களினதும் கூட்டு மொத்தப் பெறுமதி ரூபா 141,767,111 ஆக காணப்பட்டது. அதன்படி, ஏற்பாட்டை விடவும் அதிகமாக ரூபா 81,767,111 பொறுப்புக்களுக்கு கடப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(v) துப்புரவுப்பணிச் சேவை வழங்குதல்.**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2013 ஜுன் 01 ம் திகதி முதல் 2014 ஜுலை 31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியினுள் மத்திய அரசுக்குரிய வைத்தியசாலைகளுக்கான துப்புரவுப் பணிச் சேவை வழங்குவது சம்பந்தமாக, சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்துக்கும் ஒப்பந்ததாரர்களுக்கும் இடையில், சேவை ஒப்பந்தங்களில் கைச்சாத்திடடும் போது ஒப்பந்தம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதிவரை 25 நாள் முதல் 03 மாதம் 25 நாட்கள் வரையிலான கால தாமதம் ஏற்பட்டிருந்ததுடன், 05 வைத்தியசாலைகளின் துப்புரவுப் பணிச் சேவையை வழங்குவதற்கான ஒப்பந்தம் செய்து கொள்வதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களுடன் குறித்த தினத்திலிருந்து 04 மாதங்கள் கடந்த நிலையிலும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

- தேசிய மனநல மருத்துவ நிறுவகம் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, கண்டி போதனா வைத்தியசாலை மற்றும் கம்பஹா தள வைத்தியசாலை ஆகியவற்றில், ஒப்பந்ததாரர்கள் போதுமான அளவு ஊழியர்களை ஈடுபடுத்தாமை, உடல் ரீதியாக பலவீனமான மற்றும் வலது குறைந்த ஊழியர்களை ஈடுபடுத்துதல், முறையான கண்காணிப்பு நடைபெறாமை. சுத்திகரிப்பு வேலைக்குத் தேவையான இரசாயனப் பொருட்களை பெற்றுக் கொடுக்காமை, துப்புரவு செய்தல் சேவை தொடர்பான அனுபவம் மற்றும் நடைமுறை அறிவு இல்லாத ஊழியர்களை ஈடுபடுத்துதல் போன்ற குறைபாடுகள் காணப்பட்டமையினால், துப்புரவுப்பணிக்காக செலவிடப்பட்ட பணத்துக்குரிய பயன்கள் கிடைத்திதிருக்கவில்லை.

- ரிஜ்வே அம்மையார் சிறுவர் வைத்தியசாலை துப்புரவுப்பணிகளுக்கான நிறுவனத்தை தெரிவு செய்கையில், தொழிநுட்ப மதிப்பீட்டுக்குழு, அதன் விலை மனுவில் குறிப்பிட்டிருந்த ஒப்பந்த விதிகள் பற்றி இவர்கள் கவனத்தில் எடுக்கவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்தின் நிலையான மேந்தலைச் செலவுகள், 2012/2013 ஆம் ஆண்டை விடவும், 2013/2014 ஆம் ஆண்டில் 225 வீதத்தால் அதிகரித்திருந்தன. 2013 ஆம் ஆண்டின் துப்புரவுப்

பணிச் சேவைக்கான மதிப்பிடுப் பெறுமதி, ரூபா 23,940,000 ஆக இருந்ததுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்துக்கான மொத்த வருடாந்தச் செலவு ரூபா 37,881,920 (பெறுமதிசேர் வரி நீங்கலான) தொகைக்கு இணங்கியிருந்தனர். அதன்படி மதிப்பிடப்பட்ட செலவையும் விட மேலதிகமாக ரூபா 13,941,920 என்ற 58 வீதம் மேலதிகமாக செலவளிக்கப்பட்டிருந்தது. மேலும், கிருமி கொல்லிகள் தேவையான அளவினை விடவும் குறைவான அளவில் வழங்கப்பட்டமையால் துப்பரவுப் பணிகளின் திறன்தன்மை பலவீனமடைந்திருந்தது. இவ்வாறான பலவீனம் ஒப்பந்ததாரர்களிடம் தொடர்ச்சியாக காணப்பட்ட போதிலும், 2013/2014 ஆம் ஆண்டிற்கும் அவ் ஒப்பந்தத்தை அதே ஒப்பந்ததாரரிடமே கையளித்திருந்தனர்.

**(vi) <u>சுகாதார அபிவிருத்தி நிதியம்</u>**

சுகாதார அபிவிருத்தி நிதிச் சட்டத்துக்கு அமைவாக, நிதியத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளுக்கு நிதி பயன்படுத்தப்படாமல் மீளாய்வாண்டில் நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீது ரூபா 312 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் 2013 டிசம்பர் 31 ம் திகதியன்று ரூபா 172 மில்லியன் நிதியத்தின் மீதியாக இருந்தது.

**(vii) <u>திரிபோஷ வேலைத்திட்டம்</u>**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- நாடு தழுவிக் காணப்படும் சுகாதார வைத்திய அதிகாரிகளின் அலுவலகங்களின் ஊடாக திரிபோஷாவுக்கான மாதாந்த கேள்வி அளவுகள் பெறப்பட்டு, திரிபோஷ நிறுவனம் அதற்கேற்ற வகையில், தேவையான அளவு திரிபோஷவினை உற்பத்தி செய்து விநியோகிக்க திட்டமிட்டிருந்தது. எனினும் சுகாதார வைத்திய அதிகாரிகளின் பல அலுவலகங்கள் அவற்றினது மாதாந்தத் தேவை அளவுகளை குறிப்பிட்டிருக்கவில்லை. 2013 ஒக்டோபர் மாதத்திலிருந்து 2014 மே மாதம் வரையான காலத்தினுள், கண்டி மாவட்டத்தின் 43 சுகாதார சேவை அலுவலகங்கள் தமக்குரிய தேவைகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை. குடும்ப நல உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளின் காரணமாக இவ் அறிக்கைகளை அனுப்புவதில் கால தாமதம் ஏற்பட காரணம் என குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அக்கால எல்லையினுள் திரிபோஷா பயனாளிகளுக்கு சரியான முறையில் வழங்கப்பட்டதற்கான சாட்சியங்கள் இருக்கவில்லை. அதன்படி திரிபோஷ நிறுவனத்தால் அனுப்பப்படும் திரிபோஷ, குறித்த நிலையங்களுக்கு சரியான ஒழுங்கில் கிடைத்திருந்ததா என உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

- 2013 ஆம் ஆண்டுக்கான திரிபோஷா பொதியிடுவதற்கு அச்சிடப்பட்ட பொலிதீன் உறைகள் 12,500,000 தேவைப்பட்டதென தெரியவந்துள்ளது. பொலிதீன் பேக் ஒன்று அச்சிட ரூபா 3.90 செலவாவதுடன், அதற்காக ரூபா 48,750,000 வினை வெளி நிறுவனம் ஒன்றுக்கு செலுத்துவதற்கு கொள்வனவுக் குழு தீர்மானித்திருந்தது. வருடாந்தம் இவ்வாறு செய்ய வேண்டியுள்ள இச்செலவை, அச்சு இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்து திரிபோஷ நிறுவனமே பொலிதின் பைகளில் அச்சிட்டு செலவினை குறைத்துக் கொள்வது இலாபகரமானததா என ஆராய்ந்து பார்க்கப்படவில்லை.

(viii) **<u>டெங்கு ஒழிப்பு பிரிவு</u>**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- அரசாங்க டெங்கு ஒழிப்பு பிரிவினால் BTI டெங்கு கட்டியொன்றை நீர் தேங்கியிருக்கும் இடங்களில் இட்டு நுளம்புகள் அழிகின்றனவா என ஆய்வொன்றை நடாத்துவதற்கு மொஸ்கிட்டோ டன்க் ஒழுங்குபடுத்தல் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு 2013 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 18 ஆம் திகதி ரூபா 31,250,000 செலவிடப்பட்டு டெங்கு ஒழிப்பு கட்டிகள் 125,000 கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. நுளம்புகள் பரவும் இடங்கள் பற்றி முன் கூட்டியே அறிந்துகொள்ளாமை, மற்றும் பாவிக்கும் முறை பற்றிய எவ்விதமான திட்டமிடப்படாமலும் டன்க் கட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக, ரூபா 17,492,500 மதிப்புள்ள 69,970 கட்டிகள், பாவிக்கப்படாமல் காணப்பட்டன.

- மொஸ்கிட்டோ டங்க் கட்டிகளுக்கான முன்னோடிச் செயற்திட்த்தை செயற்படுத்தும்போது, அதிகமான டெங்கு நோயாளிகள் மற்றும் டெங்கு மரணங்கள் நிகழ்ந்ததாக அறியக்கிடைத்த பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிகளின் 03 அலுவலகங்களில் இரண்டு அலுவலகங்களுக்கு டங்க் கட்டிகள் பெற்றுக் கொடுப்பதற்கும், மற்றைய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு திரவ BTI பாவித்து சிறந்த பயனுள்ள நுளம்பு ஒழிப்பு முறையொன்றை கண்டுபிடிக்க வேண்டி இருந்த போதிலும், மூன்று சுகாதார வைத்திய அலுவலகங்களுக்கும் டன்க் கட்டிகள் மாத்திரமே வழங்கப் பட்டிருந்தது. BTI திரவம் பாவித்து இம் முன்னோடிச் செயற்திட்டம் நிகழ்த்தப்படவில்லை. இதன்படி BTI திரவம் மற்றும் மொஸ்கிட்டோ டன்க் கட்டிகள் பாவித்து அவற்றின் பெறுபேற்றை தீர்மானிக்க முடியாமல் போயுள்ளது. மேலும் இப் பரிசோதனை முடிவுற்ற பின் 2013 டிசம்பர் 31ஆம் திகதியளவிலும் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படவில்லை.

- ஒரு சுகாதார சேவைப் பிரிவினுள் 100 வீடுகளில் மாத்திரம் மதிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை போதுமானதாக இல்லாமையால் சுகாதார வைத்திய அதிகாரிக்குரிய பிரிவில் 250-300 இற்கும் இடைப்பட்ட வீடுகளில் மதிப்பீடு செய்வதற்கு, ஒரு வீட்டுக்கு இரண்டு மாதம் பாவிக்கத் தேவைப்படும் டன்க் கட்டிகளின் அளவு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி தேவைப்பட்ட டன்க் கட்டிகளின் அளவு 1200 ஆக இருந்த போதிலும், 125,000 டன்க் கட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

- 2013 ஆம் அண்டில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை உச்ச அளவில் தொடரச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு தேசிய நுளம்பு ஒழிப்பு வாரங்கள் 03 இதற்கென அறிவிக்கப்பட்டிருந்தது. டெங்கு பாதிப்பு அதிகமாகவுள்ள சுகாதாரப் பிரதேசம், பிரதேச வாரியாக வகைப்படுத்தப்பட்டு டெங்கு நுளம்பு ஒழிப்பு சிரமதான நிகழ்ச்சிகளுக்கான முற்பணமாக ரூபா 18,642,000 பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. எனினும் 03 டெங்கு வாரங்களுக்குள் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படாமல் வேறு வேலைகள் செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் இனங் காணப்பட்டுள்ளன. மேலும், டெங்கு ஒழிப்பு வாரங்களில் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் சம்பந்தமாக எவ்வித அறிக்கையும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

- 2013 ஆம் ஆண்டுக்கான டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளுக்கென 26 மாவட்டங்களுக்கு, ரூபா 42,125,195 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. கடந்த 5 ஆண்டுகளில் அறிக்கையிடப்பட்ட டெங்கு நோயாளிகள் மற்றும் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கைகளுடன் ஒப்பிட்டு நோக்குகையில், மரணமடைந்தோர் வீதம் கூடுதலாகக் காணப்பட்ட மாவட்டங்களுக்கு குறைவான ஒதுக்கீடுத் தொகையும், நோயாளிகள் மற்றும் டெங்கு மரணவீதம் குறைவாகக் காணப்பட்ட மாவட்டங்களுக்கு அதிகமாக ஒதுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டது.

- டெங்கு ஒழிப்பு பிரிவுக்கென மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 223 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. இதில் 17,737,326 ரூபா செலவில் Infusion Pump 179 ஐ பெற்றுக் கொள்வதற்கான கேள்வி கோருவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனரை விடவும் குறைந்த விலையிட்டு விலைமனு சமர்ப்பித்த 04 வழங்குனர்களது கேள்விகள் மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. ஏனெனில் அவர்கள் 03 கிழமைக்கு மேல் காலந்தாழ்த்துவார்கள் என இதற்கு காரணம் கூறப்பட்ட போதிலும், இவர்களால்

தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனர்கள் இவ் உபகரணங்களை உயிரியல் மருத்துவப் பிரிவிடம் கையளிக்க 24 கிழமைகள் எடுத்திருந்தனர். இதன்படி குறைந்த விலை குறிக்கப்பட்டு சமர்ப்பித்திருந்த வழங்குனர்களுக்கு குறித்த கேள்வியை வழங்கியிருப்பின் அவரது மிகக் குறைத்த விலை மனுவின்படி, ரூபா 897,250 இற்கும் ரூபா 6,263,855 இற்கும் இடைப்பட்ட ஒரு தொகை அரசாங்கத்துக்கு நிதிசார் இலாபமாக் கிடைத்திருக்க ஏதுவாக அமைந்திருக்கும். மேலும் கால தாமதம் மீது அறவிடப்பட வேண்டிய தாமதப் பணம் பற்றிய விபரமும் ஒப்பந்த விதிமுறைகளுள் உள்ளடக்கப்படாத காரணத்தால் தாமதப் பணத்தை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிட முடியாதிருந்தது.

- நீர்கொழும்பு மாவட்டப் பொது வைத்தியசாலையின் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவைப்பட்ட மருத்துவ உபகரணமான Infusion Pump 20 அலகுகளைக் கொள்வனவு செய்ய செலவிடப்பட்ட ரூபா 2,300,000 நிதி மீளளிப்பு செய்யப்பட்டிருந்த போதிலும், உயிரியல் மருத்துவ பிரிவு நீர்கொழும்பு வைத்தியசாலைக்கான 20 உபகரணங்களையும் உள்ளடக்கியதாக 179 Infusion Pump அலகுகளைக் கொள்வனவு செய்திருந்தது. அதன்படி உயிரியல் மருத்துவ பிரிவு மூலம் கொள்வனவு செய்யப்பட்ட Infusion Pump ஒரு அலகின் பெறுமதி ரூபா 98,620 ஆக இருந்ததுடன், அது ஜப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட ஒன்றாக காணப்பட்ட போதிலும் நிதி மீளளிப்பு செய்யப்பட்ட 20 Infusion Pump களின் ஒரு அலகின் பெறுமதி ரூபா 115,000 ஆக காணப்பட்டதால் அரசாங்கத்துக்கு ரூபா 320,580 நட்டம் ஏற்பட்டிருந்தது.

- நிர்மாணிக்கப்படாத ஒரு ஆய்வு கூடத்தின் தேவைக்காக ரூபா 232,140 பெறுமதிவாய்ந்த 02 கணணிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அவை 10 மாதங்களுக்கும் மேலாக பாவிக்கப்படாமல் உள்ளது.

- டெங்கு ஒழிப்பு பிரிவு, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பேணிவந்த பொருட் பதிவேடு ஏடு இற்றைப்படுத்தப்படவில்லை என்பதுடன், நிதிப் பிரமாணம் பதிவேட்டில் 754 ஆம் பிரிவுக்கு அமைவாக ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் பொருளிருப்பு உள்ள கையிருப்பு மீதிகளை அறிந்துகொள்ள முடியுமான விதத்தில் சமப்படுத்தப்படவில்லை. மேலும், பூச்சிகளைப் பற்றி ஆராயும் உதவி ஆய்வாளரின் பெயரில் கொடுக்கப்பட்டிருந்த 4 வகையான உபகரணங்களினது 450 அலகுகள் பங்கிடப்பட்ட விதம் மற்றும் அதன் கையிருப்பு மீதி தொடர்பான விவரங்களும் காணப்படவில்லை.

- டெங்கு ஒழிப்பு பிரிவுக்கென, மீளாய்வாண்டில் 03-Projectors, 02-Electric Screen with remafe Comafe Control, 02 புகைப்பட கருவிகள்(Nikon Cool Pix

R-510) மற்றும் 02 நிழற்பட பிரதி இயந்திரங்கள் (போட்டோ கொப்பி இயந்திரங்கள்) கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இவைகளில் ஒவ்வொரு கருவி என்ற வீதத்தில் அமைச்சின் ஒரு அதிகாரிக்கு வழங்கப்பட்டிருந்தபோதிலும், அவ் அதிகாரியின் அலுவலக பொருட்பதிவேட்டில் இவ் உபகரணங்கள் உள்ளடக்கப்பட்ட பதிவுகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(i) **ஒப்பந்தங்களை நிர்வாகம் செய்தல்**

**---------------------------------------------------------**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அமைச்சின் ‘‘சுவசிரிபாய’’ கட்டிடத்துக்கான மின் பிறப்பாக்கி (KVA 500) இயந்திரமொன்றை விநியோகித்து, அதனைப் பொருத்தும் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 11,203,360 ஆக இருந்த போதிலும் ஒப்பந்ததாரருக்கு ரூபா 11,906,563 செலுத்தப்பட்டிருந்தது. இதன்படி ரூபா 703,203 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

- தேசிய வைத்தியசாலையின் மருத்துவமனைப் வாட்டுத் தொகுதிக்கு என ரூபா 9,890,000 வரி நீங்கலாக (KVA 500) சக்தி மின் பிறப்பாக்கி இயந்திரமொன்றை விநியோகித்து அது பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருந்தது. பல சந்தர்ப்பங்களில் இவ்வியந்திரம் மின்னோட்ட பரிசோதனையின்போது செயற்படாததற்கு ஏதுவான தடைகளைச் சீராக்கம் செய்ய ஒப்பந்தக்காரர் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. மேலும் பதுளை பொது வைத்தியசாலைக்கு 2011 ஆகஸ்ட் 29 ஆம் திகதியன்று விநியோகிக்கப்பட்டு பொருத்தப்பட்ட ரூபா 4.4 மில்லியன் பெறுமதி வாய்ந்த (KVA 500) சக்தி வாய்ந்த மின் பிறப்பாக்கி இயந்திரமும், மின்னோட்ட பரிசோதனையின் போது செயற்படாததன் காரணமாக, அதனை முறையாக சீராக்கம் செய்து வைத்தியசாலைக்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

- 2009 ஆம் ஆண்டு 06 மின் பிறப்பாக்கிகள் வெளிநாட்டுக் கடன் மூலம் கொள்வனவு செய்யப்பட்டு, 06 வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இவற்றில் 02 இயந்திரங்கள் KVA 1000 வலுவுடையதும், மற்றைய 04 இயந்திரங்கள் KVA 500 வலுவுடையதுமான மின் பிறப்பாக்கி இயந்திரங்களாகும். இவற்றுக்கான ஒரு வருட உத்தரவாத காலம் முடிவடைந்த பின்னர், KVA 1000 வலுவுடைய இயந்திரம் ஒன்றுக்கு ரூபா 28,692,401 எனவும் KVA 500 இயந்திரம் ஒன்றுக்கு ரூபா 14,700,979 என

செலுத்தப்பட வேண்டிய மொத்தப் பராமரிப்புச் செலவு ரூபா 115,892,834 ஆக இருந்தது. அமைச்சுக்கும் தேசிய வைத்தியசாலைக்கும் கொள்வனவு செய்யப்பட்ட மின் பிறப்பாக்கி இயந்திரம் (KVA 500) ஆகியவற்றின் பராமரிப்புக்கென செலுத்தப்படும் தொகைகள் முறையே ரூபா 675,000 மற்றும் ரூபா 425,000 என்ற அளவில் காணப்பட்டதுடன், இச் செலவுகளுடன் ஒப்பிடுகையில் மேற்படி பராமரிப்பு செலவு மிக அதிகமான செலவொன்றாக காணப்படுகிறது. முன்பு கொள்வனவு செய்யப்பட்ட மின் பிறப்பாக்கி இயந்திரம் ஒன்றுக்கு 05 வருடங்களுக்குமான பராமரிப்புச் செலவினை விடவும் தற்போதுள்ள புதிய இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்கான கிரயம் குறைவடைவதாக அவதானிக்கப்பட்டதுடன், அதன்படி பாரிய ஒரு தொகை பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவுகளுக்காக செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் கொள்வனவின்போது இது ஒரு முகாமைத்துவ பலவீனம் காரணமாக நிகழ்ந்துள்ளதென கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

- மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சுகாதார அமைச்சினால் செய்து கொள்ளப்பட்ட ரூபா 2,082,822,047 பெறுமதி வாய்ந்த 21 கட்டுமான ஒப்பந்தங்களும், குறித்த திகதியில் கட்டி முடிக்கப்படவில்லை. அவற்றின் ஒப்பந்த காலங்களும் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரை 2 மாதங்கள் தொடக்கம் 18 மாதங்கள் வரை கால தாமதம் இடம்பெற்றிருந்தது.

- நுவரெலியா பொது வைத்தியசாலையின் முதிர்வடையாத சிறுவர் அலகினை மேம்படுத்துவதற்கான ரூபா 6,685,000 இற்கு கட்டுமான ஒப்பந்தம் பூர்த்தியடையும்போது 1½ வருடங்கள் காலதாமதம் ஏற்பட்டிருந்தது. ஒப்பந்ததாரருக்கு நிர்மாணப் பணிகளை செவ்வனே, தடையின்றி மேற்கொள்வதற்கு வேலைத்தளத்தை சிறப்பாக ஒழுங்குபடுத்திக் கொடுக்காத காரணத்தால் இக்கால தாமதம் ஏற்பட்டிருந்தது.

- அம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையில் பாபட்ரோன் ரெலிகாபோல்ட் பிரிவுக்கு ரூபா 90,312,712 பெறுமதியான கட்டடமொன்றை நிர்மாணிக்கும் ஒப்பந்தமொன்றிற்காக 2011 செப்டெம்பர் 16 ஆம் திகதி ரூபா 20,230,045 முற்பணமாக கொடுக்கப்பட்டிருந்தது. அம் முற்பணம் கொடுக்கப்பட்டு 03 வருடத்தையும் விடவும் கூடுதலான காலம் கடந்திருந்த போதிலும், குறித்த ஒப்பந்தத்தின் வேலைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை.

- அமைச்சரவைத் தீர்மானத்தின்படி மாதிரிகள் வகுக்கப்பட்டு நிர்மாணிப்பதன் அடிப்படையில் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் மதிப்பீட்டு விலைகள்,

நிர்மாணம் மற்றும் பொறியியலாளர் சேவைகளுக்கான விலைகள் என்பவை, அமைச்சின் நிலையான தொழில்நுட்ப குழுவின் அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு மாற்றமாக, விலைகள் பற்றிய அங்கீகாரம் இன்றி, 13 வைத்தியசாலை வளவுகளில் நிர்மாணிக்கப்பட்ட 13 கட்டுமான ஒப்பந்தங்களின் நிமித்தம், 2013 டிசம்பர் 31 ஆம் திகதிவரை ரூபா 3,062 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. இவை தொடர்பில் பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஒப்பந்தங்கள் தொடர்பில் உடன்படிக்கை கைச்சாத்து இடம்பெற்றிருக்க வில்லை.

(ii) செலவு மதிப்பீடுகள் ஒப்பந்ததாரரினாலேயே தயாரிக்கப்பட்டிருந்தன.

(iii) நிலையான விலைக்குழுவின் அங்கீகாரம் மற்றும் திட்டங்கள் மாற்றியமைக்கப்படல் ஆகிய காரணங்களினால், ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமல் ஏற்பட்ட கால தாமதம் 10 மாதங்கள் தொடக்கம், 02 வருடங்களும் 03 மாதங்கள் வரையிலான கால இடைவெளிகளைக் கொண்டிருந்தன.

- கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் மிலேனியம் வார்ட்டு மற்றும் உதவி மருத்துவச் சேவைக்களுக்கான கட்டிடம் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2006 ஆம் ஆண்டில் ரூபா 398,139,547 (வரி நீங்கலான) செலவில் வழங்கப்பட்டிருந்தது. மாநகர சபையிடமிருந்து இக் கட்டிடத்தின் திட்ட வரைபடத்துக்கான அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. ஆலோசனை வழங்கும் நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தத்தின் காலத்தை நீடிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்பதுடன் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்ட ஒப்பந்தகாரர் வேலைத் தளத்தை விட்டுச் சென்றுள்ளார். 7 வருடங்களுக்கு மேல் கடந்திருந்த போதிலும் நிர்மாண ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் கட்டடத்தினுள் பொருத்துவதற்கு என கொள்வனவு செய்யப்பட்ட மின் உயர்த்தி இயந்திரம், துணி உலர்த்தும் உபகரணம் மற்றும் குளிரூட்டல் இயந்திரங்கள் என்பன பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மகரகம புற்றுநோய் வைத்தியசாலையின் தாதிமார்களுக்கான விடுதி நிர்மாணம் தொடர்பான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 71,759,005 இற்கான ஒப்பந்தத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 03 வருடங்களின் பின்னரே ஒப்பந்தத்தில் கையொப்பம் இடப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாத நிலையில் ரூபா 32,036,246 செலுத்தப்பட்டிருந்தது.

(ii) திரவியங்கள், உபகரணங்கள் மற்றும் மருத்துவ நியதிச்சட்ட அதிகார சபை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- மருந்து திரவியங்கள் மற்றும் உபகரணங்கள் ஒவ்வொன்றும் உற்பத்தி செய்யப்பட்ட நாட்டின் நியமங்களுக்கும் பிரமாணங்களுக்கும் உட்பட்ட நிலையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளனவா எனவும், பருமன், அளவு மற்றும் குணநலன் தொடர்பாகவும் விரிவான மதிப்பீடு செய்யப்பட்ட வேண்டும். அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் விஷேட தரமுடைய மருந்தியலாளர் ஒருவரும் 25 மருந்தியலாளர்களும் காணப்பட வேண்டும் எனினும், விஷேட வகுப்பு மருந்தியலாளர் ஒருவராவது இல்லாது 16 மருந்தியலாளர்கள், மருந்துத் திரவியங்கள் மற்றும் உபகரணங்களின் மீளாய்வு நடவடிக்கைகளில் மீளாய்வாண்டில் ஈடுபட்டிருந்தனர் என்பதுடன், இவ்வருடத்தினுள் மதிப்பீடுக்கென 20,000 விண்ணப்பங்கள் மதிப்பீட்டுக்கு கிடைக்கப் பெற்றிருந்தன. இதன்படி வேலை நாட்களில் ஒரு மருந்தியலாளர் 05 விண்ணப்பங்கள் அளவில் மதிப்பீட்டுக்கு உட்படுத்த வேண்டும். மருந்தியலாளர்கள் குறைந்த அளவில் காணப்படுவதனால் பதிவு செய்தல் நடவடிக்கைகள் தாமதமாகின்றதென அவதானிக்கப்பட்டது.

- திரவியங்கள் மற்றும் உபகரணங்களுக்கான விண்ணப்பங்களின் மதிப்பாய்வுகளின் பின்பு பதிவுச் சான்றுப்பத்திரம் வழங்குவதற்காக 2013 டிசம்பர் மாதம் 31 திகதி வரையில் 2,175 உறுதிச்சீட்டுக்கள் தயார்படுத்தப்பட்டு இருந்த போதிலும், பதிவு சான்றுப் பத்திரங்களை அவ் விண்ணப்பதாரிகளால் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. பதிவுச்சான்றுகளின் மூலம் கிடைக்கப் பெற்றிருக்க வேண்டிய அண்ணளவான வருமான மதிப்பீடு ரூபா 9,291,000 ஆக இருந்தது.

- 1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க திரவியங்கள், உபகரணங்கள் மற்றும் மருத்துவ பொருட் சட்டத்தின் (2012 செப்டம்பர் 18 ஆம் திகதிய வார்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலின் படி திருத்தப்பட்ட) 39 அ (1) ஆம் பிரிவுக்கு அமைவாக, அதிகார சபையின் எழுத்து மூலமான முன்கூட்டிய அனுமதி இன்றி எந்த ஒரு நபருக்கும் ஏதேனும் திரவிய வகை ஒன்றையோ, 42(அ)(1) ஆம் பிரிவின்படி எதேனும் உபகரணமொன்றையோ விளம்பரப்படுத்த முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு பதிவு செய்வதற்கென சமர்ப்பிக்கப்பட்ட விற்பனை விளம்பரங்களின் கூட்டுத் தொகை 420 ஆக இருந்ததுடன், 206 விற்பனை விளம்பரங்களுக்கான பதிவுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன், மிகுதி 214 விளம்பரங்களுக்கும் கணக்காய்வு தினமான 2014 மே 20ஆம் திகதிவரையில் பதிவு பெற்றுக் கொடுக்கப் பட்டிருக்கவில்லை. எனினும், அவ்விளம்பரங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

- 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டுவரை திரவியங்களைப் பதிவு செய்வதற்காக 8258 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன், அதில் 6535 விண்ணப்பங்கள் மதிப்பிடப்பட்டு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருந்தன. திரவியங்களின் உற்பத்திகளை பதிவு செய்யும் போது, திரவியங்களின் தரம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. திரவியங்கள் மூலம் புற்றணுக்கள் உருவாகின்றதென தற்காலத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதால் அதுபற்றி கவனம் செலுத்தப்பட்டு, திரவிய வகைகளின் பதிவுகள் இடம்பெற முன் அவை, தரப்பரிசோதனைக்காக அனுப்பப்படவில்லை.

- ஆட்சேபனை இல்லாக் கடிதம் பிறப்பித்தற் செயற்பாட்டில் காணப்பட்ட பலவீனங்களை 2011 மற்றும் 2012 ஆம் வருடங்களின் கணக்காய்வு விசாரணைகளினூடாக முகாமைத்துவத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. இது தொடர்பில் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்கும் அரச நிறுவனங்களுக்கும் மருந்துகளை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு ஆட்சேபனையற்ற கடிதம் பிறப்பிக்கப்படுவதாக பதில் கூறப்பட்டது. 2013 ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை திரவியங்கள் மற்றும் உபகரணங்களுக்கென பிறப்பிக்கப்பட்ட 1680 ஆட்சேபனை இல்லாக் கடிதங்களில் 811 கடிதங்கள் தனியார் பிரிவுகளுக்கே வழங்கப்பட்டிருந்தன. மேலும், அரச நிறுவனங்களுக்கு மருந்துப் பொருட்கள் விநியோகித்தலில், முறையான பதிவினை பெற்றுக் கொள்ளாத நிறுவனங்களுக்கும் மருந்துப்பொருள் இறக்குமதி செய்வதற்கான அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதனால் ஆட்சேபனை இல்லாக் கடிதம் கொடுப்பதற்குக் காரணமாக கூறப்படுவதுடன், மருந்துப் பொருட்கள் ‘‘விரைவாக பெற்றுக்கொள்ளல்’’ என்ற ஆவணத்துக்கு பின்னால் மறைந்து கொண்டு சட்ட திட்டங்களை ஊடறுத்துச் செல்ல இவ் ஆட்சேபனை இல்லாக் கடிதத்தைப் பயன்படுத்துவதாகவும், அதன்படி தரச்சிறப்பு பரிசீலனை செய்யப்படாமல் மருந்துப் பொருள் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்ற செயல்முறை இதன் முலம் நிகழ்வதாகவும், குறைந்த தரமுடைய மருந்துப் பொருட்கள் நாட்டினுள் வரும் ஆபத்து நிலவுகின்றமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- அதிகார சபையினால் 10,000 இற்கும் அதிகமான மருந்துப் பொருட்களின் பெயர்கள் மற்றும் வியாபார குறியீடுகள் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன், வருடாந்தம் புதிய விண்ணப்பங்கள் 1500க்கும் மேல் கிடைக்கப் பெறுகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு முறையான வேலைத்திட்டம் காணப்படவில்லை. மருந்துப் பாவனையின் போதும் உற்பத்திகளின் போதும் மெய்மையாய்வொன்றைச் செய்வதற்கு எதிர்நோக்கும் வரையறைகள் தொடர்பில்

கவனம் செலுத்தப்பட்டபோது நாட்டின் பொது மக்கள், மருந்துப் பொருள் உபயோகிக்கும் முறைகள் தொடர்பில் இடர்பாடுகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதுடன், ஒரே வகையான மருந்து பல்வேறு குறியீட்டுப் பெயர்களின் கீழ் பதிவுசெய்யப்படுகின்றமையும் இப் பிரச்சினைகளுக்கான காரணங்களாகும். உதாரணமாக, பெரசிட்டமோல் என்ற மருந்தின் 500mg க்கு வியாபார குறியீட்டுப் பெயர்கள் 40 உம் அமொக்ஸிலின் என்ற மருந்துக்கு 60 வியாபார குறியீட்டுப் பெயர்களும் உள்ளன.

(ஆ) **தேசிய வைத்தியசாலை**

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படன.

(i) பிரதேசக் கொள்வனவுச் சபையினால் அவர்களது ஒதுக்கீட்டு எல்லையான ரூபா 500,000 இனைத் தாண்டி 5 சந்தர்ப்பங்களில் ரூபா 14,197,420 பெறுமதியான சரக்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) மூன்று உருப்படிகளுக்குரிய இரசாயனப் பொருட்களுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை விட 50 வீதத்துக்கும் மேலாக உள்நாட்டில் கொள்வனவு செய்யவேண்டி ஏற்பட்டிருந்ததுடன், அவ்வாறு கொள்வனவு செய்யும்போது, மருத்துவ வழங்கல் பிரிவின் மூலம் விநியோகிக்கப்படும் விலையை விடவும் ரூபா 2,038,447 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(iii) தேசிய வைத்தியசாலையின் தேவையின் நிமித்தம் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவைப் பிரிவு ரூபா 7,103,623 பெறுமதி வாய்ந்த ப்லாஸ்மா நுண்ம ஒழிப்புக் கருவியைக் கொள்வனவு செய்தது. அக் கொள்வனவு சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் காணப்பட்டன.

- கொள்வனவுச் சபையின் பரிந்துரைகளுக்கு மாற்றமாக கொள்வனவு செய்வதற்கான நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது.
- தேசிய வைத்தியசாலையின் பாவனைக்காக கோரப்பட்ட அவ் வியந்திரம் பாவனைக்குப் பொருத்தமற்ற ஒரு இடத்தில் பொருத்தப்பட்டிருந்தது.
- இடவசதியற்ற ஒரு இடத்தில் இவ்வியந்திரத்தை பொருத்தியதனால் அவ்வியந்திரம் பழுதடைந்து காணப்பட்டது.
- இயந்திரத்தை செயற்படுத்துவதற்குத் தேவையான வெப்பமுள்ள இடமொன்றில் இயந்திரத்தை பொருத்தியிருக்கவில்லை.
- இயந்தித்தின் உதிரிப்பாகங்கள் காலாவதியாகியுள்ளமையும், மற்றும் இயந்திரத்தை பயன்படுத்த முடியாத காரணத்தாலும் நுண்ம ஒழிப்புக்கென 2013 ஜனவரி மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை ரூபா 6,030,980 பணம் தனியார் துறைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

(iv) தேசிய வைத்தியசாலையின் 06 பிரிவுகளிலும் பொருத்தப்பட்டிருந்த சீர்வளி இயந்திரங்கள் சரியான முறையில் தொழிற்படாமை மற்றும் பேணுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக 47 சீர்வளி இயந்திரங்கள் 2012 ஆம் ஆண்டில் செயற்படாத நிலைமையில் காணப்பட்டன.

(v) எலும்பியல் வேலைத்தளத்தை பரிசோதித்த போது பின்வரும் விடயங்கள். வெளிப்படுத்தப்பட்டன.

- பணியாளர்கள் வேலை செய்த நாட்களின் எண்ணிக்கையும் அவர்கள் செய்த வேலைகளின் அளவையும் ஒப்பிட்டு நோக்குகையில், அவர்களின் உற்பத்தி, குறைந்த அளவில் காணப்படுகின்றமையும், இலங்கை தேசிய வைத்தியசாலையில் காணப்படும் இயந்திர உபகரணங்கள், இடவசதி மற்றும் உழைப்பு ஆகியவற்றை பயனுள்ள வகையில் ஈடுபடுத்துவது தொடர்பில் முறையான வேலைத் திட்டமொன்று காணப்படவில்லை.
- எலும்பியல் வேலைத்தளம் சம்பந்தமாக, திறைசேரியிடம் சமாப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு காணப்படாததுடன், இதன் காரணமாக அங்கு பதவிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள வடிவமைப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

- இலங்கை பதிலீட்டு உறுப்புகளை சீர்படுத்தும் பயிற்சிப் பாடசாலையின் பயிற்சி நெறியை பூர்த்திசெய்த மாணவர்களை ஒப்பந்த அடிப்படையில் வைத்தியசாலைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனினும் அவர்களை நிரந்தர ஆளணியில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு எடுத்திருக்கவில்லை.

- இலங்கை தேசிய வைத்தியசாலையின் எலும்பியல் வேலைத்தளதின் முகாமையாளர் மற்றும் பக்கஉறுப்புகளை உருவாக்கும் பதவியில் பணிபுரியும் தொழிலாளர்கள் இருவருக்கு இப்பயிற்சிப் பாடசாலையில் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், மேல்மட்ட முகாமைத்துவம் அவ்வறிவினைப் பயன்படுத்தி பலனைப் பெற்றுகொள்ள எவ்விதமான நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

- பதிலீட்டு உறுப்புக்களை சரிசெய்யும் பயிற்சிப் பாடசாலையில் காத்திருப்போர் பட்டியலின்படி, 2014 மார்ச் மாதம் 21 ஆம் திகதி வரை பக்க உறுப்புகளை உருவாக்கிக் கொள்வதற்கென 330 வருகைதரும் நோயாளிகள் காணப்பட்டதுடன், இலங்கை தேசிய வைத்தியசாலையின் எலும்பியல் வேலைத் தளத்தின் நடவடிக்கைகள் செயற்றிறனான முறையில்

நடைபெறுமேயாயின், அந் நோயாளிகளை இதற்கென அங்கு அனுப்பி, செயற்றிறன் மிக்க ஒரு சேவையை பெற்றுக் கொடுத்திருக்க முடியும்.

- இப் பதிலீட்டு உறுப்புகளைச் சரிசெய்யும் பயிற்சிப் பாடசாலையுடன் தொடர்புடைய சுகாதார அமைச்சின் பிரிவு செயற்றிட்டங்கள் சம்பந்தமாக முறைப்படியமைந்ததும் விவரங்களுடன் கூடியதுமான ஆவணக் கோவைகளை உருவாக்கி பேணவில்லை. செயற்திட்டங்கள் தொடர்பில் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. இச் செயற்திட்டம் சம்பந்தமாக, 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை ரூபா 20,483,268 அரசாங்கத்தின் பங்களிப்பாக இருந்ததுடன், இச்செயற்திட்டத்துக்கு உதவி வழங்கும் நிப்போன் நிதியம் மற்றும் கம்போடிய நம்பிக்கை சபை ஆகிய அமைப்புகள் இதற்கென வழங்கிய நிதி ரீதியான பக்களிப்புகள் சம்பந்தமாக எதுவித தகவல்களும் கணக்காய்வின்போது வெளிப்படுத்தப்படவில்லை என்பதுடன், செற்திட்ட செலவுகள் தொடர்பில் முறையான கண்காணிப்போ நிர்வாகமோ சுகாதார அமைச்சின் கீழ் நடைபெற்றிருக்கவில்லை.

- தேசிய வைத்தியசாலை மாதாந்தம் அண்ணளவாக 50 மில்லியன் ரூபாவினை விடவும் அதிகமான தொகையை மருந்துப் பொருட்களுக்காக செலவிடுகின்றது. எனினும், உள்ளக மருந்துக் களஞ்சிய சாலையின் உள்ளே பேணிவைக்கப்படும் மருந்துப் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் அவற்றின் தரச் சிறப்புகளுக்கு பாதகம் ஏற்படாதவாறு களஞ்சிய சாலையின் அறைகள் தயார்படுத்தப்பட்டு மேம்படுத்தல் நடவடிக்கைகள் 2014 ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

- தரமற்ற மருந்துகள் என அறிக்கையிடப்பட்ட 10 வகையான மருந்துகள் தரமற்றவை என மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரின் சுற்றறிக்கை மூலம் வைத்தியசாலைகளுக்கு அறிவித்திருந்த போதிலும், அம் மருந்துகளின் 3.33 வீதம் முதல் 69 வீதம் வரை நோயாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. மேலும் 2013 ஆம் வருடம் தரமற்றது என ஒதுக்கி வைக்கப்பட்ட மருந்துத் தொகையில் ரூபா 6,443,712 பெறுமதி வாய்ந்த 24 உருப்படிகளுக்குரிய 1,006,859 அலகுகள், மற்றும் வெளியக மருந்தகத்தினுள் ரூபா 1,577,387 பெறுமதி வாய்ந்த 11 உருப்படிகளுக்குரிய 361,057 அலகுகளும், உள்ளக மருந்தகத்தினுள் காணப்பட்டன.

- தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் மின்வலு அலகை நிர்மாணிப்பதற்கு வெளிநாட்டுக் கடன் திட்டத்தின் கீழ் ரூபா 2,791,162,500 தொகையும் அப் பிரிவிற்குத் தேவையான தளபாடங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்குமாக முறையே ரூபா 43,329,448 மற்றும் ரூபா 820,018,985 என்ற வகையில் ரூபா 3,654,510,933 செலவிடப்பட்டிருந்தது. இப்பிரிவு திறக்கப்பட்டு 3 வருடங்கள் கடந்திருந்த போதிலும் ஆளணி மற்றும் உபகரணங்களின் பற்றாக்குறை காரணமாக தீவிர சிகிச்சைப் பிரிவில் காணப்படும் 77 கட்டில்களில் 27 மாத்திரமே செயற்பாட்டு மட்டத்தில் இருப்பதாகவும் ஏனைய வார்ட்டுகள் மற்றும் சத்திர சிகிச்சைக் கூடங்களில் காணப்படும் கட்டில்களின் எண்ணிக்கையில் பாதி அளவே செயற்படும் தன்மையில் உள்ளன. இப்பிரிவு நிர்மாணிக்கப்பட முன் அதன் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் இப் பிரிவுக்கு பதவி அடிப்படையில் தேவைப்பட்ட ஆளணியை கோரியபோது, முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் 50 வீதத்துக்கும் 90 வீதத்துக்கும் இடைப்பட்ட ஆளணிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டவில்லை. எனினும் அங்கீகாரம் வழங்கப்பட்ட ஆளணியை விட 28 வீதம் முதல் 525 வீதம் வரையிலான இடைவெளியை ஏற்படுத்தக்கூடிய அளவில் மேலதிகமான ஆளணி இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

(இ) தேசிய மனநல மருத்தவ நிலையம்
------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1996 ஆம் ஆண்டிலிருந்து செயலற்றுப் போயிருந்த கழிவுநீர்த் தொகுதி 2013 செப்தெம்பர் 20 ஆம் திகதியளவில் கட்டிடத் திணைக்களத்தினால் மேம்படுத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. வைத்தியசாலை முகாமைத்துவம் அம் மேம்படுத்தல் நடவடிக்கை சம்பந்தமான மதிப்பீட்டுச் செலவு, மற்றும் மேம்படுத்தல் வேலைகள் முடிவடையும் நாள் பற்றிய தரவுகளை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கவில்லை.

(ii) வைத்தியசாலையில் பணியாற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர், அவருக்குரிய பணிக் கடமைகளை நிறைவேற்றத் தவறிய காரணத்தால், வைத்தியசாலையின் துப்பரவுப்பணியில் அது மிகுந்த அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளமை தெளிவாகின்றது.

(iii) தாபனத்துக்கு அன்பளிப்பாகக் கிடைத்துள்ள ரூபா 3,467,971 சரியான திட்டங்களுடன் கூடிய முகாமைத்துவத்தினூடாக நோயாளர் நலன்புரிச் சேவைகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை.

(iv) சுகாதார அமைச்சின் நிதிப் பரிபாலன அதிகாரம் வழங்கல் ஆவணத்தின் 23 ஆம் பந்திக்கு முரணாக, ரூபா 435,177 பெறுமதியுடைய கராஜ் ஒன்றை திருத்தம்

செய்யும் ஒரு ஒப்பந்தத்தில், ஒப்பந்தத்துக்கான முழு மதிப்பீட்டை தயார் செய்யாது, பகுதிபகுதியாக மதிப்பீடுகள் தயார்செய்யப்பட்டு அப்பணி செய்யப் பட்டிருப்பட்டிருந்தது. மேலும், இம் மேம்படுத்தல் நடவடிக்கை அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் அடிப்படையில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) அமைச்சினால் வைத்தியசாலைக்கு உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட ஜீப் வண்டியை ரூபா 391,350 செலவு செய்து திருத்தியமைக்கப்பட்ட போதிலும், அது பாவனைக்கு எடுக்க முடியாத நிலையில் காணப்பட்டது. இந்த ஜீப் வண்டியை மீண்டும் அமைச்சிடம் ஒப்படைக்குமாறு கூறி வைத்தியசாலைப் பணிப்பாளர் கடிதம் மூலம் அறிவித்திருந்த போதிலும், அது கையளிக்கப்படாமல் வைத்தியசாலை வளவுக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) <u>கண்டி போதனா வைத்தியசாலை</u>

பின்வரும் விடயங்கள் அவதானிப்புக்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) வைத்தியசாலைக்குத் தேவையான மருந்துகளின் அளவை குறித்த கால வரையறைக்குள் மருத்துவ வழங்கல் பிரிவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதிலும், மருத்துவ வழங்கல் பிரிவு அக்கால வரையறைக்குள் வழங்கியிருக்கவில்லை. இதனால் அம்மருந்துப் பொருட்களை உள்நாட்டில் கொள்வனவு செய்ததால் மருத்துவ வழங்கல் பிரிவு வழங்கும் விலையை விடவும் கூடிய விலை செலுத்தப்பட வேண்டி ஏற்பட்டிருந்தது. இதன்படி, 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரையில் 03 வகையான மருந்துகளுக்கு மருத்துவ விநியோகப் பிரிவு வழங்கும் விலையை விட ரூபா 7,512,582 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) நோயாளிகளுக்கு நிபுணத்துவ மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை மருத்துவ வழங்கல் பிரிவிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு அல்லது அவற்றை உள்நாட்டில் விலை கொடுத்து வாங்குவதற்கு 34 சந்தர்ப்பங்களில் மருத்துவ வழங்கல் பிரிவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 12 சந்தர்ப்பங்கள் தவிர்ந்த மிகுதி சந்தர்ப்பங்களில் மருத்துவ வழங்கல் பிரிவு எவ்வித பதிலையும் தெரிவித்திருக்கவில்லை.

(iii) 2012 ஆம் ஆண்டு வர செலவுத்திட்ட யோசனைக்கு அமைய, பிரசவ விடுமுறையில் இருக்கும் மருத்துவ அதிகாரிகளுக்கு ஒய்வு நேர பணிக்கான படி, போக்குவரத்து மற்றும் வருகை தருவதற்கான உதவு தொகை, ஆகியவற்றை செலுத்த இணங்க முடியாதென நிறுவனப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டிருந்த அறிவித்தலை அமைச்சுச் செயலாளரின் கடிதம் மூலம் அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அமைச்சின் செயலாளர் திறைசேரியின் அல்லது நிறுவனப் பணிப்பாளரின் அல்லது தேசிய சம்பளம் மற்றும் பதவியணி

ஆணைக்குழுவின் பரிந்துரையின்றி அக் கடிதத்தை இரத்துச் செய்துவிட்டு, மீண்டும் அக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்துள்ளார்.

(iv) 2012 ஜனவரி மாதம் தொடக்கம் 2013 நவம்பர் மாதம் வரையிலான காலத்தினுள் கண்டி போதனா வைத்தியசாலையில் காணப்பட்ட ரூபா 6,703,491 பெறுமதி வாய்ந்த 35 உருப்படிகளுக்குரிய 186,269 அலகு மருந்துகள் தரத்தில் குறைந்ததாக இருந்தன.

(v) புற்றுநோய் கதிர்வீச்சு மருத்துவ பிரிவின் களஞ்சிய சாலையில் ரூபா 5,000,000 பெறுமதி வாய்ந்த உபகரணங்கள் பாவனைக்கு எடுக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தன.

(vi) 2013 நவம்பர் 26 ஆம் திகதியளவில் வைத்தியசாலையின் இருதய நோயாளர் பிரிவின் (Face Maker பிரிவில்) Permanant Pace Maker தட்டுப்பாடு நிலவியதால் Permanent Face Maker சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய நோயாளிகள் 159 பேர் காத்திருப்புப் பட்டியலில் இருக்க வேண்டியிருந்தது. 05 சந்தர்ப்பங்களில் Permanent Face Maker பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வைத்தியசாலை முகாமைத்துவம் அறிவித்த போதிலும், அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டவில்லை.

(உ) <u>கம்பளை தள வைத்தியசாலை</u>

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வெளி நோயாளர் பிரிவுக்கு தினமும் 800 முதல் 900 வரையிலான நோயாளர்கள் வருகை தருவதுடன், வைத்தியசாலையினால் வழங்கப்பட்டிருந்த நலன் பேண் வசதிகள் மிகக் கீழ் மட்டத்தில் நிலவியது. இதனால் நோயாளிகள் அசௌகரிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன், வைத்தியசாலையின் உட்பகுதி அசுத்தமடையவும் இது காரணமாகியது.

(ii) இவ் வைத்தியசாலைக்கு இணைக்கப்பட்டிருந்த மருத்துவர் ஒருவர் 2 வருடகால சம்பளமற்ற லீவு பெற்றுக் கொண்டு வெளிநாட்டில் கல்வி பயிலச் சென்று, லீவு முடிவில் அவரது பணிக்கு சமூகமளிக்காத காரணத்தால் அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணமான ரூபா 402,075, தண்டப்பணம் 2013 ஜூலை 01ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) 2004 ஒக்டோபர் 12 ஆம் திகதி நியமனம் பெற்ற தாதி பெண் அலுவலர் ஒருவர், நியமனம் பெற்ற திகதியில் இருந்து 10 வருடங்கள் பணியாற்ற வேண்டிய ஒப்பந்தத்தை மீறியதன் காரணமாக ஏற்பட்ட நட்டம் ரூபா 100,000 உடன், அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட ஏனைய அனைத்து

செலவுகளையும் அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) வைத்தியசாலைக்குச் சொந்தமான உள்ளக பயிற்சி பெறும் மருத்துவர் உத்தியோகபூர்வ இல்லம், மற்றும் தனிநபர் விடுதி ஆகிய வற்றுக்கான நீர் மற்றும் மின்சார வாசிப்பு மானிகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், உள்ளக பயிற்சி பெறும் மருத்துவர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களில் 06 அறைகளில் குடியிருந்த நிபுணத்துவ மருத்துவ உத்தியோகத்தர்களிடமிருந்து எதுவித கட்டணங்களும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(v) கம்பளை தள வைத்தியசாலையில் ரூபா 869,450 பெறுமதி வாய்ந்த மருந்துப் பொருள் உருப்படிகள் 23 இன் 1,232,442 அலகுகள், தரப் பரிசோதனையில் தேர்ச்சியுறாது காணப்பட்டன. 2009 மே 21 ஆம் திகதிய WMM/01/13/2009 ஆம் இலக்கமுடைய சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் போசாக்கு அமைச்சின் சுற்றறிக்கையின் படி, அம்மருந்துப் பொருட்கள் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியன்றும் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பி வைக்கப்படாமல் களஞ்சியசாலையின் உள்ளே குவிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன. இதனால் நாளாந்தம் பெறும் மருந்துப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் தடங்கல் எழுந்துள்ளது.

(ஊ) <u>ரிஜ்வே அம்மையார் சிறுவர் வைத்தியசாலை</u>

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 செப்டெம்பர் 01 ஆம் திகதி திடீர் விபத்துக்குள்ளாகியிருந்த நோயாளர் காவு வண்டி, 2013 ஒக்டோபர் 12 ஆம் திகதி அளவில் சீர்படுத்தல் நடவடிக்கை பூர்த்தியாக்கப்பட்டு வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், வாகனம் விபத்துக்குள்ளாகிய போது காப்புறுதி மேவுகைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை என்ற காரணத்தால், காப்புறுதி நட்ட ஈட்டை பெற்றுக்கொள்ள முடியாமல் போயிருந்தது. சீர்படுத்தலுக்குரிய மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 432,100 ஆக இருந்தது.

(ii) அமைச்சினால் சீர்படுத்தல் செய்ய வேண்டாமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த பார ஊர்தி, 2011 ஆகஸ்ட் 18 ஆம் திகதி தொடக்கம் 03 வருடங்கள் வரையிலான காலங்களாக, போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படாமல் வைத்தியசாலை வளவுக்குள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(iii) 04 ஆம் இலக்க வார்ட்டினுள் மின்சார இணைப்புத் தொகுதியில் அடிக்கடி மின் துண்டிப்பு நிகழ்வதை சீராக்கம் செய்வதற்கென மின்சார சபைக்கு, ரூபா 1,077,831 செலுத்தப்பட்டிருந்ததுடன், சீர்படுத்தல் சந்பந்தமாக மின்சார

சபையினால் விபரமான மதிப்பீடு சமார்ப்பிக்கப்படவில்லை. இதன்போது சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்த விலைகள் நியாயமானவையா என உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சாட்சியங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(எ) உயிரியல் விஞ்ஞான பொறியியல் சேவைப் பிரிவு
----------------------------------------------------------------------------------------
பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) வைத்தியசாலைக்கு பெற்றுக்கொள்ளும் மருத்துவ உபகரணங்கள் பழுது பார்க்கப்படும்போது, வருடாந்த சேவைகள் மற்றும் பழுது பார்த்தல் செலவீட்டில் உழைப்பு மற்றும் உதிரிப் பாகங்கள் என்பவற்றுக்கான செலவுகளும் உள்ளடங்கும். சேவைகள் மற்றும் பழுதுபார்த்தல் ஆவணங்களில் காணப்படும் அறிக்கைகள் பரிசோதிக்கப்பட்டபோது, குறித்த காலப்பகுதியினுள் உதிரிப்பாகங்கள் பொருத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு மொத்தச் செலவீடும் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, உதிரிப்பாகங்கள் பொருத்தப்படாத ஊழியச் செலவுகளுக்கு மாத்திரம் ரூபா 45,700,840 செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு பணம் செலுத்தப்படுவதால் பயனற்ற செலவொன்றை ஏற்கவேண்டியுள்ளதுடன், பணத்துக்கான வேலை செய்யப்படவில்லை எனவும், அவ்வாறு செலுத்தும்போது, அரசாங்கத்துக்கு பெருமளவான நட்டம் ஏற்படுவது தெளிவாகின்றது. உதிரிப் பாகங்கள் பொருத்தப்படும் சந்தர்ப்பங்களில் மட்டும் அதற்குரிய பணம் செலுத்தப்படும் அடிப்படையிலான ஒப்பந்தம் செய்து கொள்ளப்படின், பெரியதொரு தொகைப் பணத்தை மீதப்படுத்த முடியுமென்பது தெளிவாகிறது.

(ii) Spot Lamp 62 இனை ரூபா 4,789,500 க்கு கொள்வனவு செய்யும்போது, தொழில்நுட்ப மீளாய்வுக் குழுவின் தொழிநுட்ப விபரக்குறிப்பின் 6 ஆம் 7 ஆம் இலக்கங்களை பூர்த்தியாக்காத, இரண்டாவது குறைந்த விலையை அனுப்பியிருந்த நிறுவனம் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அந்நிறுவனத்துக்கு மருத்துவ உபகரணங்கள் பதிவுகளுக்காக திரவியங்கள் மற்றும் மருந்துகள் அதிகார சபை பிறப்பித்திருந்த சான்றுப் பத்திரத்தின் காலாவதித் திகதி 2012 ஜூலை 02ஆம் அன்று முடிவடைந்திருந்தது. தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினர் இவ் விடயத்தின்பால் கவனம் செலுத்தாததால் மீண்டும் தொழிநுட்ப விபரக் குறிப்புகளை மீளாய்வு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தொழில் நுட்ப மீளாய்வுக் குழுவின் கவனயீனத்தால் அக் கொள்வனவுக்கு, கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு மாதத்துக்கு மேல் காலம் கடத்தப்பட்டிருந்தது.

(iii) 21 High Pressure Sterilizer சாதனங்களை ரூபா 142,080,386 க்கு கொள்வனவு செய்தபோது, 2012 டிசம்பர் 20 ஆம் திகதி தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு

பரிந்துரைத்த அனைத்து தொழிநுட்ப விவரக்குறிப்புகளையும் பூர்த்தி செய்த இரண்டாவது குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திடம் கொள்வனவு பொருளாதார நலன் கருதி, குறைந்த விலையுள்ள நிறுவனத்தில் கொள்வனவு செய்வதற்கு, கொள்வனவுச் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. இக் கொள்வனவின்போது தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்தின்படி, அவற்றின் உத்தரவாத காலம் முடிவடைந்ததன் பின்பு சேவைகள் மற்றும் பேணுதற் செலவுகளுக்கு தேறிய நடைமுறைப் பெறுமதியிலான எதிர்வரும் 5 ஆண்டுகளுக்குமான எதிர்காலச் செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 55,540,795 ஆகவும், மேலும், நிராகரிக்கப்பட்ட நிறுவனத்தின் முதலாம் ஆண்டுக்கான சேவைகள் மற்றும் பேணுகைக்கான செலவுகள் செலுத்தப்பட்டிருந்ததுடன், எதிர்வரும் 4 ஆண்டுகளுக்குமான தேறிய தற்போதய பெறுமதியின் கூட்டுத் தொகை ரூபா 1,233,367 ஆக இருந்தது. விலைப் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்படும்போது போது, உத்தரவாத காலத்தின் பின் இயந்திரங்களை பேணுவதற்கான செலவுகளின் மீதான தேறிய நடைமுறைப் பெறுமதியை கவனத்தில் கொள்ளாமல் இயந்திர உபகரணங்களின் விலையை மாத்திரம் கவனத்திற் கொண்டு வழங்குனர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதால் ரூபா 45,061,689 நட்டத்தை பொறுப்பேற்க வேண்டி ஏற்பட்டிருந்தது.

(iv) 8 C-Arm X-Ray இயந்திரங்களை ரூபா. 64,035,256 இற்கு கொள்வனவு செய்யும் போது, பொருள் வழங்கல் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட தினத்திலிருந்து கடன் பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கு 3½ மாதம் தாமதமாகியது. இவ் இயந்திரம் 2013 மார்ச் மாத இறுதிக்கு முன் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் எனினும், 6 வைத்திய சாலைகளும் இவற்றை பொருத்துவதற்கு 5 முதல் 6 மாதம் வரை தாமதப் படுத்தப்பட்டிருந்தது. கேகாலை வைத்தியசாலையில் இவ்வியந்திரத்தை பொருத்துவதற்கான இடம் சரியானதாக அமையாததால் 2014 ஆம் ஆண்டின் இறுதி வரை அவ்வியந்திரம் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இரத்தினபுரி பொது வைத்தியசாலை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது வைத்தியசாலைக்குப் தேவையான அளவு தொகைக்கான கொள்வனவுக் கட்டளை விடுக்கப்படாததன் காரணமாகவும், உற்பத்தித் திகதி தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு உகந்த தரச்சிறப்புடன் கூடிய மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்யப்படாமையாலும் காலாவதியானதும், தரம் இழந்ததுமாக மொத்தம் ரூபா 7,914,058 விடவும் கூடிய பெறுமதியுடைய மருந்துத் தொகை மற்றும் நீண்ட நாட்களாக இருப்பில் உள்ள சத்திர சிகிச்சை உபகரணத் தொகுதி என்பன களஞ்சிய சாலையில் காணப்படுகிறன.

(ii) மிகப் பழைய நிலையில் காணப்பட்ட வடிகால் தொகுதியின் சுவர் வெடித்துள்ளதால், அது திருத்தம் செய்யப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டது. 2013 ஆம் வருட இறுதி வரையிலும் எதுவித பராமரிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

(iii) இரத்தினபுரி பொது வைத்தியசாலையில் அழுக்குத் துணி கழுவும் சேவை வழங்கும் ஒப்பந்ததாரர்களுக்கு பணம் செலுத்தும்போது, அச் சேவையானது சுகாதாரப் பாதுகாப்பானதாகவும், ஒப்பந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகவும் செய்யப்படுகின்றனவா? என பரிசீலிக்கப்படாமல், பின்பற்றப்படவேண்டிய சட்டரீதியான முக்கியத்துவங்கள் முறையாக செய்யப்படாமல், 2013 ஆம் ஆண்டு ரூபா 2,219,613 செலுத்தப்பட்டிருந்தது. செலுத்தப்பட்ட பணத்துக்குச் சமனாக பெற்றுக் கொள்ளப்பட்ட சேவை, தரச்சிறப்பு வாய்ந்ததாக இல்லை என சான்றுகள் உள்ளன. எனினும் குறைபாடு தொடர்பான எழுத்து மூலமான அறிக்கைகளை பரிசீலித்துப் பார்த்த பின், ஒப்பந்தப் பிரகாரம் தண்டப் பணம் அறவிடுவதற்கோ, அல்லது ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கோ, நடவடிக்கை எடுக்காது தொடர்ந்தேர்ச்சியாக அதே ஒப்பந்ததாரரிடமிருந்தே சேவையைப் பெற்றுக் கொண்டு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

(iv) நிரற்படுத்தப்பட்ட அரசாங்க வீடுகளை பெற உரித்துடைய உத்தியோகத்தரிடமிருந்து, உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான கூலி அறவிடப்படும்போது, தாபனக் கோவையின் xix ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பந்திக்கு கருமமாற்றப்படவில்லை. மருத்துவர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பில் மட்டும் ஒரு மருத்துவ உத்தியோகத்தரின் மாதச் சம்பளத்திலிருந்து 0.7 சதவீதத்திற்கு அண்மிய தொகையை உத்தியோகபூர்வ இல்லக் கூலி என்றவகையில் அறவிடப்பட்டிருந்தது. தாபன விதிக் கோவையின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களின் நீர், மின்சாரம், மற்றும் எரிவாயு தொடர்பிலான மெய்ச் செலவுகளை அவ் உத்தியோகத்தரே செலுத்த வேண்டும் எனினும், நீர் மற்றும் மின்சாரம் ஆகியவற்றுக்கென ஒரு தாதி உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 25 வீதமும், ஏனைய பதவிகளுக்குறிய உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 50 மற்றும், ரூபா 100 என அமைந்த வகையில் நுகர்வுச் செலவுடன் ஒத்துப்போகின்றவாறு மாதாந்தம் அறவிடப்பட்டிருந்ததை இரத்தினபுரி பொது வைத்தியசாலையின் 2013 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 42,038,772 மொத்த மின்சாரச் செலவுடன் ஒப்பிடுகையில் தெளிவாகியுள்ளது.

(ஓ) பேராதனை போதனா வைத்தியசாலை
-----------------------------------------------------------

(i) 2010 மே மாதம் 24 ஆம் திகதி தனியார் நிறுவனமொன்றிலிருந்து ரூபா 4,129,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த Platlet Agrometer என்ற இயந்திரம் கணக்காய்வு தினமான 2014 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதி வரையில் பாவனைக்கு எடுக்கப்படாமல் இரசாயன கூடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. உத்தரவாத காலம் முடிவடைந்த நிலையில் காணப்பட்ட கணணிக்குரிய மொனிட்டர் காணாமல் போய் இருந்தமையும் அத்தினம் மேற்கொள்ளப்பட்ட பௌதீக ரீதியான பரிசீலனையின் போது தெளிவாகியது.

(ii) சம்பளமற்ற லீவுக்கான தகைமை பெற்று, வெளிநாட்டில் தொழில்களில் ஈடுபட்ட மூன்று மருத்துவ உத்தியோகத்தர்கள், ஒப்பந்தத்தின் படி குறித்த தினத்தில் கடமைக்கு சமூகமளிக்காததன் காரணமாக, அவ் உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்கத்துக்கு வரவு வைக்கப்படவேண்டிய தொகைகளின் மொத்தப் பெறுமதி ரூபா. 2,272,694 ஐ அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஓ) வைத்தியசாலை நில வாடகை
---------------------------------------------

(i) 2012/2013 ஆம் ஆண்டு அனுராதபுர போதனா வைத்தியசாலையின் ஒரு சிற்றுண்டிச்சாலை ரூபா 1,528,000 இற்கு மாதாந்த வாடகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அவ் ஒப்பந்தகாரரிடமிருந்து 2014 திசெம்பர் 08 ஆம் திகதி வரையில் அறவிடப்பட வேண்டிய சிற்றுண்டிச்சாலை வாடகை ரூபா 17,222,126 ஆக இருந்தது.

(ii) மருத்துவர்களின் விடுதியில் சட்டத்துக்கு முரணான ரீதியில் அல்லது வெளி நபர் ஒருவரினால் 2012 ஏப்ரல் மாதம் முதற் கொண்டு நடாத்தப்படும் சிற்றுண்டிச் சாலைக்கான, மாதாந்த வாடகை, நீர் மற்றும் மின்சார பாவனைக்கான கட்டணங்கள் எதுவும் அறவிடப்படவில்லை. அச்சிற்றுண்டிச்சாலையிலிருந்து 2014 டிசம்பர் 08 ஆம் திகதி வரை ரூபா 18,000,000 அறவிடப்பட வேண்டியுள்ளது.

(iii) கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை வளவின் நில வாடகைப் பரிசீலனையின்போது பின்வரும் விடயங்கள் தெளிவாகின.

- வைத்தியசாலை வளவுக்குள் நடாத்திச் செல்லப்படும் சிற்றுண்டிச் சாலையிலிருந்து 2012 டிசம்பர், 2013 பெப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதங்களுக்காக அறவிடப்பட வேண்டிய வாடகை மீதி ரூபா 1,087,660 ஆகவிருந்தது.

- வைத்தியசாலை வளவுக்குள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த அரசாங்க வங்கி மற்றும் தனியார் வங்கி ஒன்றுக்குச் சொந்தமான 2 டெலர் இயந்திரங்களினது நிறுவப்பட்ட தினங்களை அறிய முடியவில்லை என்பதுடன், அவற்றுக்கான வருடாந்த நில வாடகையாக ரூபா 30,000 வீதம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அரச வங்கியிலிருந்து அறவிடப்பட வேண்டிய வருடாந்த நில வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

- மருத்துவர்களின் தங்குமிட விடுதியிலிருந்தும் புதிய கட்டிடத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற சிற்றுண்டிச் சாலையிலிருந்தும், புத்தக விற்பனை நிலையத்திலிருந்தும், வாடகையொன்றோ அல்லது நீர் மின்சாரங்களுக்கான எவ்வித கட்டணமொன்றோ அறவிடப்படவில்லை. வெளி நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் இவ்வாறு வைத்தியசாலையின் நிலப்பகுதிகள் வாடகைக்கு விடப்பட்டிருந்த போதிலும் நில அளவு பற்றி குறித்தறியப்படவில்லை.

(iv) இரத்தனபுரி வைத்தியசாலையின் சிற்றுண்டிச் சாலையிலிருந்து வாடகைப் பணம் அறவிடப்படும்போது, 80 நாட்கள் வரை நீண்ட கால தாமதம் ஏற்படுவதுடன், ஒப்பந்த வரையறைகளுக்கு உட்படாமல் செயற்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. சமைக்கப்படாத உணவு பொருள் களஞ்சியப்படுத்தல் மற்றும் உணவு தயாரித்தல் விடயங்களில் முன் அனுமதி பெறப்படாமல், பாதுகாப்பற்ற முறையில் மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டு தகடு தரத்தினால் தயாரிக்கப்பட்ட பகுதியொன்றை சிற்றுண்டிச்சாலை கட்டிடத்துடன் இணைத்துள்ளனர். 2013/2014 ஆம் ஆண்டுகளுக்கான சிற்றுண்டிச் சாலை ஒப்பந்தத்தையும் தற்போது இருக்கும் ஒப்பந்ததாரருக்கே சாட்டப்பட்டிருந்தது.

(ஐ) குருநாகலை போதனா வைத்தியசாலை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) மருந்துக் களஞ்சியசாலைத் தொகுதி வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப் பட்டுள்ளதுடன், மருந்துகள் அடங்கிய பெட்டிகளை பாதுகாப்பின்றி வைத்திருந்தமை களப் பரிசோதனைகளின் போது கண்டுபிடிக்கப்பட்டன. 2014 ஜனவரி 30 ஆம் திகதியன்று சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் 07 வகைகளை உள்ளடக்கிய 365400 அலகுகளை புற்றுநோய் வார்ட் தொகுதியின் 2 அறைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன், மருந்துகள் அடங்கிய பெட்டிகள், இரண்டு மாடிகளில் விராந்தையில் பாதுகாப்பற்ற முறையில் காணப்பட்டன.

(ii) 2014 ஜனவரி 30 ஆம் திகதியன்று தரம் அற்றுப்போன மருந்துப் பொருட்கள் 42 வகைகளை உள்ளடக்கிய 540185 அலகுகள் மற்றும், சத்திர சிகிச்சைக்கான

உபகரண வகை 06 உள்ளடங்கிய 44322 அலகுகள் களஞ்சியங்களில் இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், இந்த இருப்பின் பாவனையைக் கைவிடுமாறு விடுக்கப்பட்ட அறிவித்தல் கிடைக்கப்பெற்ற வேளையில், அவற்றின் ஒரு பகுதி, வாட்களுக்கும், வெளிப்புற மருந்துக் களஞ்சியங்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவு மூலம், மாதிரிப் பரிசோதனைக்கு முன்னர் வைத்தியசாலைகளுக்கு மருந்துப் பொருள் இருப்புகள் வழங்கப்படுகின்றமையால், நோயாளர்களுக்கு தரமற்ற மருந்துகள் போய்ச்சேருகின்ற ஆபத்து நிலவுவது அவதானிக்கப்பட்டது.

1.15. மனிதவள முகாமைத்துவம்
--------------------------------------------

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர்
---------------------------------------------------------------------------------------------------------------------------------

2013 டிசம்பர் 31 ஆம் திகதிய பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட தரம் | 13,245 | 11,902 | 1,343 |
| (ii) | மூன்றாம் தரம் | 30,946 | 24,251 | 6,695 |
| (iii) | இரண்டாம் தரம் | 5,093 | 3,467 | 1,626 |
| (iv) | முதலாம் தரம் | 28,746 | 21,699 | 7,047 |
| | **மொத்தம்** | **78,030** | **61,319** | **16,711** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 டிசம்பர் 31ஆம் திகதியன்று குருநாகலை போதனா வைத்தியசாலையில் 25 வகையான பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை விட அதிகமான ஊழியர்கள் 536 மிகையாகவும், 28 வகையான பதவிகளுக்கு 430 ஊழியர்களுக்கான வெற்றிடங்களும் காணப்பட்டன.

(ஆ) 2013 ஜுன் 30 ஆம் திகதியன்று கொழும்பு தெற்கு வைத்தியசாலையில் 12 வகையான பதவிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட ஆளணிக்கும் அதிகமாக 97 பேர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதேபோல், 31 பதவிகளுக்குரிய 394 ஆளணிக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. இவ் வெற்றிடங்கள் காணப்படும் இடங்களில் தாதிகள் மற்றும் சிற்றூழியர்களின் வெற்றிடங்கள் காரணமாக, 20 வாட்டுகள், 2 சத்திர சிகிச்சைக் கூடங்கள், குழந்தைச் சிறுவர் பிரிவு (எஸ்.ஸீ.பி.யு), மகப்பேற்று அறை, தீவிர மருத்துவ

சிகிச்சைப் பிரிவு, குருதியியல் மருத்துவ பிரிவு மற்றும் எக்டஸ்கோப் பிரிவு ஆகிய பிரிவுகளின் தாதிமார் பதவியணியில் 257 பேர்களும் சிற்றூழியர் பதவியணியில் 59 பேர்களுக்குமாக வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

(இ) கம்பளை தள வைத்தியசாலையின் 2013 ஜூன் 30 ஆம் திகதியன்று இடம் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியுடன் உள்ளவாறான ஆளணி ஒப்பிட்டபோது, 30 வகையான பதவிகளுக்குரிய 104 உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களும் 05 பதவிகளுக்குரிய 25 உத்தியோகத்தர்கள் மிகையாகவும் காணப்பட்டனர். அதேபோல் இக் வெற்றிடங்களில் 04 மருந்தியலாளர்களின் பற்றாக்குறை காரணமாக களஞ்சியசாலைகளிலும் அதேபோல் வெளி நோயாளர்களுக்கான மருந்து விநியோகிக்கும் போதும் செயற்றிறனான சேவையை வழங்க முடியாமல் இருந்தது.

(ஈ) இரத்தினபுரி பிரதேச பொது வைத்தியசாலையில் 2013 ஆம் ஆண்டினுள் அங்கீகரிக்கப்படாத நான்கு பதவிகளுக்காக, 13 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையும், 37 பதவிகளில் 237 வெற்றிடங்களும் காணப்பட்டன.